Registered as a news paper.        பக்கங்கள்: பத்து        விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01   திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 12 (15.04.2003) செவ்வாய்க்கிழமை   இதழ் :194

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-767)

## ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது திருமலையில் குண்டுவீச்சு!

### ஓட்டோவில் வந்தவர் தாக்குதல் நடத்தினாராம்

திருகோணமலை நகரில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது, நேற்றிரவு கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. இதில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படாத போதிலும் கட்டடத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்றிரவு 8.30 மணியளவில், திருமலை நகரின் உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது, ஓட்டோவில் வந்த ஒருவர் கைக்குண்டை வீசி எறிந்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார். வீசப்பட்ட கைக் குண்டு அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தினுள் வீழ்ந்து வெடித்ததில் கட்டடத்துக்குச் சேதம் ஏற்பட்டது. இத்தாக்குதலை புலிகளே செய்ததாக ஈ.பி.டி.பியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (01,04)

## வரதன் குழுவின் கிரனைட் வீச்சில் இளைஞன் பலி; பெண்கள் காயம்

### மட்டு. ஆரையம்பதியில் சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டத்தில், விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து செயற்பட்டுவரும் வரதன் குழு நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - ஆரையம்பதியில் நேற்றுமுன்தினம் மாலை, வீடொன்றின் முன்பாக நின்ற பெண்ணொருவர் மீது, வரதன் குழுவினர் பட்டாசுகளை வீசியுள்ளனர்.

இந்த இளம் பெண்ணின் மைத்துனரான அழகுதுரை கணேசன் என்பவர் இதனைக் கண்டித்துள்ளார். இதன் போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, பின் கைகலப்பாக மாறியது. இதன்பின் அங்கிருந்து சென்ற வரதன் குழுவினர் நள்ளிரவில் மேலும் பலரை அழைத்து வந்து அந்த வீட்டின் மீது கைக்குண்டை வீசினர்.

இதன் காரணமாக அழகுதுரை கணேசன் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் மூன்று பெண்கள் உட்பட நான்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# 1.3 பில்லியன் அமெ. டொலர் இலங்கை அரசு கோருகிறது

### வொஷிங்ரன் மாநாட்டில் கோரிக்கைப் பத்திரம் சமர்ப்பிப்பு

(வொஷிங்ரன்)

**அடுத்த ஆறு ஆண்டுகால அபிவிருத்திக்காக, 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக இலங்கை அரசு நேற்று வொஷிங்ரன் மாநாட்டில் சமர்ப்பித்த கோரிக்கைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எதிர்வரும் ஜூன்மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னோடியாக, நேற்று வொஷிங்ரனில் சுமார் 30 நாடுகள் பங்குபற்றும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் இலங்கை அரசு சமர்ப்பித்த பத்திரத்தில் இக்கோரிக்கையை இலங்கை விடுத்துள்ளது.

1.3 பில்லியன் டொலர்கள் உதவியில் 459 மில்லியன் டொலர்கள், வட-கிழக்கினைப் புனரமைப்பதற்காகச் செலவிடப்படுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் -

2 மில்லியன் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவது தொடர்பான விரிவான திட்டம் ஒன்றையும் இலங்கை அரசு நேற்றைய மாநாட்டில் சமர்ப்பித்தது.

### இந்தியப் பங்களிப்பு தேவையாம்

இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதான நடவடிக்கைகளில், இந்தியா சம்பந்தப்படாமல் இருக்கக்கூடாதென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

எமது அயலவர்களுடனான உறவைப் பாதிக்கும் வகையில் இந்தியா நடந்துகொள்ளக்கூடாது. என்ன நடப்பினும் இது எமது பிராந்தியம். இங்கு இந்தியா வாளாவிருக்கக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விளையாட்டுத்துறையின் நடுவப் பணியகம் திறப்பு

தமிழீழ விளையாட்டுத்துறையின் நடுவப் பணியகம் நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில், ஈகச்சுடரை நகுலன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

விளையாட்டுத்துறைக் கொடியினை, வன்னி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தை, மாவீரர் கப்டன் காண்டீபனின் தந்தையார் பத்மநாதன், நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பெயர்ப் பலகையினை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் கனகராஜா திரைநீக்கம் செய்து வைத்தார். சிறப்புரையை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா நிகழ்த்தினார்.

## இலங்கை கோரிய நிதியினை வழங்க ஐ.எம்.எப். இணக்கம்

(கொழும்பு)

வொஷிங்ரனில் நேற்று ஆரம்பமான இலங்கை சம்பந்தமான திட்டமிடல் மாநாட்டில், இலங்கை கேட்ட நிதியுதவியை வழங்க உலக நாணய நிதியம் சம்மதம் தெரிவித்துள்ளது.

இலங்கை நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த, நிதியுதவி குறித்த கோரிக்கையை மாநாட்டில் முன்வைத்தார்.

நேற்றைய மாநாட்டில் -இருபத்தியொன்பது நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றியதுடன், உலகவங்கி, உலக நாணயநிதியம் உட்பட இருபத்தைந்து சர்வதேச ஸ்தாபனங்களும் பங்குபற்றின.

இம்மாநாட்டில், இலங்கை சார்பில் கலந்துகொண்ட அமைச்சர் மிலிந்த மொறகொட - சீனப் பிரதி நிதியமைச்சர் லியோ ஷாண், நெதர்லாந்து நாட்டின் பிரதிநிதி பக்னஸ் ரையற், அமெரிக்க திறைசேரி வெளிவிவகா ரச் செயலாளர் ஜோன் ரெயிலர் ஆகியோரைச் சந்தித்து உரையாடியதுடன்,

இந்தியாவின் நிதியமைச்சின் செயலாளர் நாராயணசாமியுடன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானச் சூழ்நிலையினை அபிவிருத்திக்கு பயன்படுத்துக!

### உலகவங்கித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையை, அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்காக, இலங்கை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் வூல்ரென்சன் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொடவுடனான சந்திப்பின்போதே, அவர் இதனைத் தெரிவித்ததாக பொருளாதார சீர்திருத்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இவ்வருட இறுதிக்குள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் உலக வங்கியின் தலைவர் கூறியிருக்கின்றார்.

## மிதிவெடியுடன் விளையாடிய மாணவன் பரிதாபகர மரணம்

(யாழ்ப்பாணம்)

மீசாலையில், மிதிவெடி வெடித்ததில், சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி மாணவனான பதினான்கு வயதுச் சிறுவன் பலியானான்.

மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த ஆறுமுகராசா சுகேந்தன் (வயது 14) என்ற சிறுவன், புத்தாண்டு தினமான நேற்றுக் காலை 6.15 மணியளவில், வீட்டு வளவினுள் கைவிடப்பட்டிருந்த மிதிவெடி ஒன்றினை எடுத்து சுவரோடு எறிந்து விளையாடியபோது, அது வெடித்ததில் படுகாயமடைந்தநிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், சிகிச்சை பலனளிக்காததால் அச்சிறுவன் மரணமடைந்தார்.

மரண விசாரணைகளின் பின்னர் சிறுவனின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (லி,25)

### விண்ணாணம் விநாசியார்



கழுதை தேஞ்சு கட்டெறும்பான மாதிரித்தான் எங்கட பகுதிக்கு உதவிகள் வரப்போகுது!

## சமாதான நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியின் செயல் இடையூறு!

### கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் அண்மைய நடவடிக்கைகள், இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருப்பதாக, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியிடம் சமாதானத்தைப் பற்றி வலியுறுத்தும் வகையில், ஏனைய மதத் தலைவர்களையும் ஒன்றிணைத்து - ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் கத்தோலிக்க ஆயர் பேரவை மேலும் தெரிவித்துள்ளது.

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

01-505632, 074-612656, 01-390128

(சி-730)

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி

புத்தாண்டு என்றாலே உள்ளத்தில் உவகை பொங்குகிறது! புத்துணர்ச்சியும் மேலிடுகிறது!! அது மட்டுமா? அளவற்ற எதிர்பார்ப்புகளும்தான். அதுவும் இந்தச் சுபானுப் புத்தாண்டு இருக்கிறதே - அதை மக்கள் அனைவருமே மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றார்கள். காரணம், எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்ற சித்திரபானு ஆண்டில் நாம் அடைந்த ஏமாற்றங்கள் ஏராளம். இது ஏன்? மழை பொழிவதற்கு அதிபதியான கிரகம் (மேகாதிபதி) சித்திரபானு ஆண்டில் சனி பகவான் ஆவார். அந்த ஆண்டு முழுமையையும் கட்டுப்படுத்தியவரும் சனி பகவானே! கண்டிப்பிற்குப் பெயர் பெற்றவர் சனி, ஆதலால் மழை குறைந்தது. நிலம் வரண்டது. பயிர் காய்ந்தது. ஆதலால்தான் மக்கள் அனைவரும் சுபானுப் புத்தாண்டை இருகரம் விரித்து வரவேற்கிறார்கள். இந்தச் சுபானுப் புத்தாண்டில் அனைத்துக் கிரக பதவிகளும் மாறுகின்றன. வருடம் முழுவதையும் தனது சக்தியினால் கட்டுப்படுத்துவது புதனின் ஆகர்ஷண சக்தி. மக்களின் மனநிலையையும், அறிவாற்றலையும் கட்டுப்படுத்துவது சந்திரனின் ஈர்ப்பு சக்தி. நீர்நிலைகள், கடல், மேகங்கள், மழை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது சூரியனின் ஆகர்ஷண சக்தி. இதேபோன்றுதான் எந்தெந்தக் கிரகத்தின் ஈர்ப்புச் சக்தி, இந்தப் பூமியின் எந்தெந்த அம்சத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் சுபானு ஆண்டு முழுவதும் வைத்துக்கொண்டு இருக்கிறதோ அதனையே 'ராஜா', 'மந்திரி' என்ற சொற்களால் அந்தந்தக் கிரகத்தின் அதிகாரச் சக்தியைப் பொறுத்து நமது புராதன நூல்கள் குறிப்பிடுகின்றன.

சுக்கில பட்சம், பூரம் நட்சத்திரம், சித்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் திருக்கணிதப்படி காலை 8.45 மணிக்கும், வாக்கியப்படி காலை 9.48 மணிக்கும் மங்களகரமான சுபானு தமிழ்ப் புத்தாண்டு பிறந்துள்ளது.

இந்தப் பலன்கள் அனைத்தும் திருக்கணித, வாக்கிய கணித முறைகளிலுள்ள வித்தியாசங்களைக் கணக்கில் கொண்டே எழுதப்பட்டுள்ளன. ஆதலால், எந்தப் பஞ்சாங்கத்தைக் கடைப்பிடிப்பவராக இருந்தாலும் அவர்கள் அனைவருக்குமே இந்த ராசி பலன்கள் பொருந்தும்.

## மேடம்

அச்சுவினி, பரணி,
கார்த்திகை
1 ஆம் பாதம்



அதிபதி கிரகம்: செவ்வாய்.

உங்கள் விஷேச தனித்திறன்கள்: உறுதியான மனம், எத்தகைய கடினமான சோதனையிலும் தளராத மனத் தைரியம், எந்தக் காரியம் ஆனாலும் உடனுக்குடன் செய்தல், தன் உயிரையும் மதிக்காமல் ஆபத்துக் காலங்களில் பிறருக்கு உதவும் துணிவு. முன்வைத்த காலை பின் வாங்கும் மனம் இல்லாதிருப்பது.

உங்கள் பலவீனம்: முன்கோபம், அவசர முடிவுகள், தனக்குத்தானே ஆபத்தை வரவழைத்துக்கொள்வது, சக்திக்கு மீறிய உழைப்பு.

### புத்தாண்டுப் பலன்கள்

**14.04.2003 முதல்**
**16.08.2003 வரை**

**குடும்பம்:** மகிழ்ச்சி நிறைந்த சுபச்செய்தியுடன்தான் பிறக்கிறது இந்தச் சுபானுப் புத்தாண்டு உங்களுக்கு.

வரும் மே மாதம் 21 ஆம் திகதி ஜீவன ஆயுள்காரரான சனி பகவான் மிதுன ராசிக்கு மாறுகிறான். அன்றிலிருந்து உங்களுக்கு சென்ற ஏழரை ஆண்டுகளாக நடைபெற்று வந்த ஏழரைச் சனிகாலம் நீங்கி விடுகிறது. ஏழரைச் சனி நடைபெற்றுவந்த அதேசமயத்தில் சென்ற சுமார் 2 ஆண்டுகளாக குருபகவானும் உங்கள் ராசிக்கு திருதீய அர்த்தாஷ்டக ராசிகளில் சஞ்சரித்தபோது அதிகமாக சிரமப்பட்டு இருப்பீர்கள். குருபகவானும் வரும் ஜூலை மாதம் நான்காம் வாரத்தில் இருந்து உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானமான சிம்மராசிக்கு மாறுகிறார். இதுவும் அதிக நன்மைகளை அளிக்கக்கூடிய கிரக மாறுதலாகும்.

பலவிதங்களிலும் கஷ்டங்களையும் மனவேதனைகளையுமே அனுபவித்துவந்த உங்களுககு, இப்போது குடும்பச் சூழ்நிலையில் மிகவும் நல்ல மாற்றம் காண்பீர்கள். மே மாதம் 21 இற்குப் பிறகு முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.

ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். உடல் உபாதைகள் குறையும், இதய சம்பந்தமான நோய்கள், நீரிழிவு, ஆஸ்மா, நரம்புத்தளர்ச்சி, மனோவியாதி, ரத்தக்கொதிப்பு ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டு நிரந்தர சிகிச்சையும் மருந்துகள் எடுத்துக் கொள்பவர்களுக்கும் சிறந்த முன்னேற்றம் ஏற்படும். குடும்ப நிர்வாகத்தில் ஏற்பட்டு வந்த பல பிரச்சினைகள் நல்லபடி தீரும். ஜீவனத்தில் (உத்தியோகம், தொழில், வர்த்தகம்) முன்னேற்றம் ஏற்படும். அதனால் வருமானமும் உயரும். இவற்றால் கடன்கள் அடைபட்டு மனம் நிம்மதி பெறும்.

ஜூலை மாதம் பிறந்த பிறகு மேட ராசி அன்பர்கள் பலருக்கு சொந்த வீடு அமையும் பாக்கியமும், சிலருக்கு தற்போது வசித்துவரும் வீட்டை விட அதிக வசதிகள் நிறைந்த வீட்டிற்கு மாற்றம் செய்வதும் ஏற்படும். எத்தகைய காரணங்களினால் மன அமைதி பாதிக்கப்பட்டிருந்தாலும் அவை அனைத்தும் நல்லபடி தீரும். அதனால் கவலைகள், வேதனைகள் நீங்கி மனதில் நிம்மதி உண்டாகும். உறவினர்களால் ஒதுக்கப்பட்டு அல்லது கேலி செய்யப்பட்டு வந்த சூழ்நிலை மாறி, கௌரவமாகவும் உறவினர்கள் மத்தியில் மதிக்கும் படியும் வாழ்வீர்கள். ஏனெனில், குரு பகவான் உங்கள் ராசிக்கு பாக்கிய ராஷ்ய லாபஸ்தானங்களுக்குத் தனது விசேஷப் பார்வையினால் சிறந்த சுப பலன்களை அளிக்கிறார். திருமண முயற்சியில் ஏற்பட்டுவந்த குழப்பங்கள், தடங்கல்கள் ஆகியவை விலகி, வரன் அமையும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கலாம். விவாகம், ஆண்டு நிறைவு, நிச்சயதார்த்தம் போன்றவை நிகழும். சுபச்செலவுகள் ஏற்படும். இருப்பினும், பணப் பற்றாக்குறை ஏற்பட சாத்தியக்கூறு இல்லை.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்:**

ஒவ்வொருவர் ஜாதகத்திலும் இம் மூன்றையும் நிர்ணயிப்பவர்கள் ஜீவனாதிபதியும், ஜீவனகாரகருமான சனி பகவானும் ஆவர். மேட ராசியினருக்கு உள்ள ஒரு தனிக் கிரகச் சிறப்பு ஜீவன காரரான சனியே ஜீவனாதிபதியும் ஆகிறார். ( பெரும்பான்மையான ஜாதகங்களில் ஜீவனாதிபதி சனியைத் தவிர வேறொரு கிரகமாக இருப்பார்.)

ஆதலால், சனி பகவான் மிதுன ராசியிலும், குரு பகவான் சிம்ம ராசியிலும் சஞ்சரிக்கும் காலத்தில் உத்தியோகம், தொழில், வர்த்தகம் ஆகிய அனைத்திலும் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு பதவியில் உயர்வும், வருமானம் அதிகரித்தலும், வீண்பழி நீங்குவதும், சக ஊழியர்களினால் ஏற்பட்ட மறைமுகச் சூழ்ச்சிகள் தோல்வியுறுவதும் கிரகங்கள் உங்களுக்கு அளிக்கப்போகும் நற்பலன்களில் சிலவாகும்.

சொந்தத் தொழில் புரியும் மேட ராசி அன்பர்களுக்கு நிதி நிலைமை சீர்படும். உற்பத்தியில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். இதுவரை தடைப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேறும். ஏற்றுமதித் துறையினர் யோக பலன்களை இப்போது எதிர்பார்க்கலாம். இலாபம் அதிகரிக்கும். தசா புக்திகள் அனுகூலமாக இருக்கும். அன்பர்களுக்குப் புதிய சொந்தத் தொழில் அமையும். வேலையில்லாமல் வருந்துபவர்களுக்கு எளிதில் நல்ல வேலை கிடைக்கும். வர்த்தகர்களுக்கு மட்டும் வஞ்சனையா செய்து விடும் கிரகங்கள்? அவர்களுக்கும் பல நன்மைகளை வழங்க இருக்கின்றன - பெரும்பான்மையான கிரகங்கள் அனைத்தும்! போட்டிகள் குறையும், இலாபம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கும். கொடுக்கல் - வாங்கலில், கடந்த சில மாதங்களாக ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலை தளரும். ஒருசிலருக்குப் புதிய வியாபாரத் துறை அமையும்.

**கலைஞர்கள்:**

வரும் மே மாதம் 21 ஆம் திகதியிலிருந்து புதிய வாய்ப்புகள், புதிய தொடர்புகள், சந்தர்ப்பங்கள் தேடிவரும். கடன் தொல்லைகளினாலும் வருமானக் குறைவினாலும் வருந்தும் மேட ராசிக் கலைஞர்களுக்கு அந்தச் சிரமங்கள் அனைத்தும் படிப்படியாகவும் விரைவாகவும் நீங்கும் என உறுதியாகக் கூறலாம். உங்களுக்குத் துயர் நீக்கும் புத்தாண்டு இது.

**அரசியல் துறையினர்:**

பல விதங்களிலும் மன நிறைவை அளிக்கக்கூடிய ஆண்டாகும் சுபானு. மேலிடத்தின் ஆதரவு அதிகரிக்கும். வருமானம் உயரும் . தசா புக்திகள் சாதகமாக இருப்பின் இதுவரை சேர்த்துள்ள செல்வத்தைக் கொண்டு உங்களது அதிகாரம் செல்வாக்கைப் பயன்படுத்தி நீங்கள் சொந்தத் தொழில் அல்லது கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்க முயற்சிப்பீர்கள். அந்த முயற்சியில் வெற்றியும் பெறுவீர்கள் என கிரக நிலைகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

**மாணவ மணிகள்:**

விசேஷ நற்பலன்களை இப்புத்தாண்டு உங்களுக்கு அளிக்கக் காத்துள்ளது. வித்தியாஸ்தானமும் வித்தியாகாரகரும் பலம் பெறுகின்ற காரணத்தினாலும், குருபகவான் உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதாலும் கற்றலில் நல்ல ஆர்வமுடனும், கடினமாகவும் உற்சாகத்துடனும் கற்கும் மனப்பான்மையும் உயர் கல்வி முயற்சிகளுக்கு அவசியமான பண வசதி ஏற்படுவதும் சிபார்சுகள் கிட்டுவதும் உங்கள் கல்வி முன்னேற்றத்தை உறுதி செய்கின்றன.

அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் விசேஷ கல்வியும் சிறப்புப் பயிற்சியும் பெற ஆர்வமுள்ள மேட ராசி மாணவ மணிகளுக்கு, அந்த ஆசை அதிக சிரமம் இல்லாமல் நிறைவேறும். விசா எளிதில் கிடைக்கும். ஜனன கால ஜாதகப்படி, தற்போது நடைபெறும் தசா புக்திகள் சாதகமாக இருப்பின் அந்த அளவிற்கு புலமைப் பரிசில் போன்ற சலுகைகள் கிடைக்கும். உங்கள் எதிர்கால உயர்விற்கு சுபானு புத்தாண்டு அத்திவாரத்தை அமைத்துத் தருமென கிரகங்கள் உறுதியளிக்கின்றன.

**விவசாயத்துறையினர்:**

பொதுவாக கிரகநிலைகளின்படி கடந்துசென்ற சித்திரபானு வருடத்தைப்போல் இல்லாமல், இந்த சுபானுப் புத்தாண்டில் நல்ல மழை பொழியும். அதனால் அதிக விளைச்சலும், வருமானமும், கால்நடைகள் விருத்தி அடைவதும் மேட ராசியினருக்கு அதிகமாகவே இருக்கும். பழைய கடன்கள் அடைபடும். ஜனனகால அடிப்படையில் புதிய விளைநிலம் வாங்கும் யோகமும் அமைந்துள்ளது.

**பெண்மணிகள்:**

கோள்சார விதிகளின்படி இந்தப் புத்தாண்டு உங்களுக்கு மன நிறைவையும், நிம்மதியையும் அளிக்கும். கணவரின் ஜாதகப்படி கிரக நிலைகள் அனுகூலமாக அமையாவிட்டாலும் கூட, உங்கள் ஜாதகக் கிரக நிலைகளின்படி (கோள் சாரத்தில்) சனி, குரு ஆகிய இரு முக்கிய கிரகங்களும் சுப பலம் பெறுவதால், குடும்பத்தில் பல நன்மைகளை நிச்சயமாக எதிர்பார்க்கலாம். குழந்தைகளாலும் மகிழ்ச்சி ஏற்படும். வரன் அமையாது மனம் வருந்தும் கன்னியருக்கு நல்ல வரன் அமையும். கர்ப்பிணிப் பெண்களுக்குச் சுகப்பிரசவம் நிச்சயம். மேட ராசிப் பெண்களுக்கு இந்த சுபானுப் புத்தாண்டில் பிறக்கும் குழந்தைகளின் ஆண்குழந்தைகளே அதிகமாகவும் பெண்குழந்தைகள் குறைவாகவும் இருக்கும்.

**தமிழ்நாட்டின் பிரபல**
**சோதிட சக்கரவர்த்தி**
**ஏ.எம்.இராஜகோபாலன்**

கணவர் - மனைவியரிடையே ஒற்றுமையும் பரஸ்பர அன்னியோன்னியமும் ஓங்கும். குடும்பச் சூழ்நிலையும் நல்லபடி அமையும். மனதை வருத்திய பல பிரச்சினைகள் நீங்களே வியக்கும்படி தீரும்.

**ஆரோக்கியம்:**

ஏழரைச்சனியின் பிடி நீங்கி விடுகிறது. அதனால் உடல் உபாதைகள் நீங்கும். ஆரோக்கியத்தில் நல்ல அபிவிருத்தி காணலாம். அறுவைச் சிகிச்சை அவசியம் என்று நீங்கள் நினைத்திருந்த உடல் கோளாறுகள் கூட மருந்துகளினாலேயே குணமடைந்துவிடும் என்ற அளவிற்குக் கிரகநிலைகள் அனுகூலமாக அமைந்திருப்பதால் உடல் நலன் திருப்திகரமாக இருக்கும். வயோதிபர்கள், நிரந்தர நோயாளிகள் ஆகியோர்கூட ஆரோக்கியத்தில் சிறந்த முன்னேற்றத்தை அடைவார்கள்.

**பொருளாதாரம்:**

மிகவும் திருப்திகரமான ஆண்டாகும். வருமானமும் உயர்வதால் குடும்ப நிர்வாகம் சிரமமின்றி நடக்கும். வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கும். பழைய கடன்களை அடைப்பதற்கு முன்னுரிமை அளியுங்கள். சேமிப்பிற்கு உகந்த வருடம் இது. கடனற்ற வாழ்வே வாழ்வாகும். இதனை மறந்து விடாதீர்கள்.

**17.08.2003 முதல்**
**12.04.2004 வரை**

மேலே கூறியுள்ள நன்மைகள் அனைத்தும் நீடிக்கின்றன. எனினும், ஜென்ம ராசிக்கு ராகுவும், சப்த ஸ்தானத்திற்கு கேதுவும் மாறுவதால் சிரமங்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளன.

ஆரோக்கியத்தில் கவனம் அவசியம். காரணம் இல்லாமல் முன்கோபம், அவசர முடிவுகள், சகவாச தோஷம் ஆகியவை ஏற்படக்கூடும். பெண்களால் அவப்பெயரும், தவறான வழிகளில் மனம் ஈடுபடுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகுதலும் மனதில் சஞ்சலங்களும் ஏற்படும். நண்பர்கள் எனக்கூறிக் கொண்டு சிலர் உங்களைப் பிரச்சினைகளில் ஆழ்த்திவிடக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படக்கூடும். ஆதலால், எச்சரிக்கையுடனும் மனஉறுதியுடனும் தெய்வ பக்தியுடனும் இருப்பது அவசியம். நல்லவர்கள் சகவாசமும் அவசியம்.

(ரிஷப ராசி நாளை)

## இன்றைய நாள் இனிய நாள்

**15-04-2003 - செவ்வாய்க்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- பந்து விரோதம், மனக் கவலை, இல்லச் சிறப்பு, குடும்பத்தில் சச்சரவு. |
| இடபம் | :- பிரயாசை மிகுதி, குடும்ப மனஸ்தாபம், பெரியோர் உதவி, தருமகாரிய சித்தி. |
| மிதுனம் | :- சோர்வு, பிரயாணக் கஷ்டம், பெரியோர் சிநேகம், புத்தித் திறமை, பொருள் வரவு. |
| கர்க்கடகம் | :- நினைத்த காரியசித்தி, உயர்ந்த நிலை, தொழில் விருத்தி, தனதானிய நிறைவு. |
| சிங்கம் | :- புத்திர பந்துக்களால் கவலை, சௌபாக்கியம், தார புத்திர விரோதம், நேத்திர ரோகம். |
| கன்னி | :- பயனற்ற பிரயாசம், தாரசுகத் தடை, இனசன கொண்டாட்டம், நற்குண விருத்தி. |

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- காரிய விக்கினம், தருமகாரிய சித்தி, புதிய ஸ்தானம், வாக்குக் கலகம், அதிகார சித்தி. |
| விருச்சிகம் | :- காலில் ரோகம், ஏமாற்றப்படுதல், வாக்கு வசீகரம், மனமகிழ்ச்சி, கோபமிகுதி. |
| தனு | :- இனசன சிநேகிதரால் கஷ்டம், பிரயாண நஷ்டம், வயிறு, மார்பில் வலி. |
| மகரம் | :- சோம்பல், இனசன கொண்டாட்டம், பொருள் வரவு, தொழில் விருத்தி. |
| கும்பம் | :- பூமி லாபம், பிரயாணக் கஷ்டம், பொருட்சேதம், புத்திர சுகம், உறவினரால் நன்மை. |
| மீனம் | :- காரிய சித்தி, வாகன சுகம், வாக்கு வசீகரம், தாரபுத்திர மகிழ்ச்சி. |


முழுநிலாக் கருத்தரங்கு

பொருள் :- உளவியல் ஆன்மீகம்
PSYCHOSPIRITUALITY
வழங்குபவர் :- அருட்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் OMI
காலம் :- 16-04-2003 நேரம்: பி.ப. 3.30 (இ. நே.)
இடம் :- அகவொளி,
சென்.பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
அனைவரும் பங்குபற்றிப் பயன்பெற வாரீர்.
- இயக்குநர்.
(சி-845)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30
(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், சிம்ரன் நடித்த
ரமணா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-731)

மானிப்பாய் இந்துக் கல்லூரி
கலாசார பேரவை நடாத்தும்
பௌர்ணமிக் கலைவிழா

- மங்கள இசை- சுதுமலை மதுசூதனன் குழுவினர்
- இசை நாடகம் - வள்ளி திருமணம்
- சுதுமலை நக்கீரன் குழுவினர் வழங்கும்
"எமது கலாசாரங்கள் பேணப்படுகின்றனவா? இல்லையா?"
என்ற தலைப்பில் பட்டிமண்டபம்.
- இணுவில் இளம் தொண்டர்கள் வழங்கும்
பக்த நந்தனார் என்ற நாடகம்
- மாப்பிள்ளை தேவை - நகைச்சுவை நாடகம்
- கல்லூரி மாணவர்கள் வழங்கும்
இன்னிசை நிகழ்வு

ஆகியன இடம்பெறும்.
காலம்:- 16-04-2003 (புதன்கிழமை)
நேரம்:- மாலை 6.00 மணி
இடம்:- கல்லூரி அரங்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
- செயலாளர்.
ஊடகஅனுசரணை: நமது ஈழநாடு

# உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியேயுள்ள 88 இராணுவ முகாம்கள் இடம் மாற்றப்படும்!

## நம்பியாரின் அறிக்கையும் 25 ஆம் திகதி சமர்ப்பிப்பு

(கொழும்பு)



சதீஸ் நம்பியார்

யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள 152 இராணுவ, கடற்படை முகாம்களில் 88 முகாம்களை இடமாற்றுவதற்குப் படைத்தலைமை தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினரின் தந்திரோபாயத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், பாதுகாப்பு நிலைமைக்குப் பாதகம் ஏற்படாத வகையிலும் இந்த 88 இராணுவ முகாம்களை இடமாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உயர் இராணுவ அதிகாரிகள் கூறியதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் அரச படையினரால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக - முன்னாள் இந்திய இராணுவத் தலைமை அதிகாரி ஜெனரல் சதீஸ் நம்பியார் தயாரித்துள்ள அறிக்கை எதிர்வரும் 25 ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்புக்கு வரும் ஜெனரல் சதீஸ் நம்பியார் உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்த தனது சிபார்சு அறிக்கையை விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



மிலிந்த மொறகொட

இந்த அறிக்கையை அரசாங்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள ஏழாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின்போது சமர்ப்பிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஜெனரல் நம்பியார் சமர்ப்பித்திருந்த முதற்கட்ட அறிக்கையை, விடுதலைப்புலிகள் நிராகரித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அராலியில் இரவுநேரப் படிப்பகம்

அராலி மத்தி செந்தமிழ் சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்டுவரும் தமிழ்ச்சோலை கல்விநிலையத்தில்- 'கங்குல் கற்றலகம்' என்ற இரவு நேரப் படிப்பகம் நேற்றுமுதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (118)

### கைகலப்பில் காயம்

(யாழ்ப்பாணம்)

உறவினர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில், தலையில் வெட்டுக்காயத்துடன் இளைஞன் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈவினைப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம் பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த அருளன் சிவநேசன் (வயது 26) என்னும் இளைஞனே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சு)

# சாதாரணதரப் பரீட்சை முடிவுகளில் மாணவிகளே முன்னணியில்!

(கொழும்பு)

அண்மையில் வெளியான கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சை முடிவுகளில் மாணவிகளே முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றிருப்பதாகப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ தரவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தப் பரீட்சையில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களுள் எட்டுப்பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முதலாம், இரண்டாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஒன்பதாம், பத்தாம் இடங்களை மாணவிகளே பெற்றுள்ளனர்.

அத்துடன், இம்முறை நாடளாவியரீதியில் பெண்கள் கூடியளவு சித்திபெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய 206 மாணவர்களின் பரீட்சை முடிவுகளைப் பரீட்சை ஆணையாளர் இடைநிறுத்தி வைத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையின்போது முறைகேடுகளில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (01)

# தமிழக அகதிகளைத் திருப்பி அழைப்பது உடனடியாகச் சாத்தியமான ஒன்றல்ல!

## ஜெயலலிதா கோரிக்கைக்கு ஜெயலத் பதில்

(கொழும்பு)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை உடனடியாகத் திருப்பி அழைப்பதற்கேற்ற சூழல் இன்னமும் உருவாகவில்லை என்றும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கோரிக்கை ஏற்புடையதல்ல என்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள் குடியமர்வு விவகார அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்தபோது, தமிழகத்திலுள்ள ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



ஜெயலலிதா

இப்போதுதான் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர். இவர்களைக்கூட முழுமையாகக் குடியமர்த்த முடியாத சூழலே நிலவிவருகிறது.

போர் நடைபெற்ற பிரதேசங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் சர்வதேச அமைப்புகளின் ஆதரவுடன் இப்போதுதான் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன.

அகதிகளை மீள் குடியமர்த்துவதற்கான சூழல் இப்போதுதான் உருவாகி வருகின்றது. இந்த நிலையில், குடியிருப்புகளிலுள்ள கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டு, மீள்குடியமர்வுக்கான சூழல் உருவாக்கப்படும்வரை தமிழகத்திலிருந்து அகதிகளை மீளத் திருப்பி அழைப்பது நல்லதல்ல என்றும் ஜெயலத் ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார். (லி)

# விடைப் புத்தகத்துடன் பிடிபட்டால் கிரிமினல் குற்றத்தின் கீழ் வழக்கு

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் விரைவில் வெளியிடப்பட்டு இவ்வருடம் நவம்பர் மாதத்தில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படும் எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன், இந்தப் பரீட்சையில் விடை எழுதும் தாள்களுக்குப் பதிலாக விடை எழுதும் புத்தகங்கள் வழங்கப்படுவதாகவும், இதன் மூலம் பெருமளவு வீண்விரயம் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னர் விடைத்தாள் ஒன்றுக்கு 50 சதத்தைப் பரீட்சைத் திணைக்களம் செலவிட்டது. இந்த விடைத் தாள்கள், பரீட்சை மண்டபத்துக்கு வெளியே பெருமளவில் எடுத்துச் செல்லப்பட்டு, துஷ்பிரயோகம் செய்யப்படுவதாலேயே இம்முறைமுதல் விடை எழுதும் புத்தகங்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடை எழுதும் புத்தகம் ஒன்றுக்காகப் பரீட்சைத் திணைக்களத்துக்கு இரண்டு ரூபா 82 சதம் செலவாகின்றதாகவும், இந்த விடை எழுதும் புத்தகத்தைப் பரீட்சை மண்டபத்துக்கு வெளியே எடுத்துச் செல்வோர் மீது கிரிமினல் குற்றச் சாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# ஐ.நாவில் உரையாற்றுவதற்கு பிரதமர் ரணிலுக்கு அழைப்பு



கோபி அனான்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை- ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்ற வருமாறு ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் ஐ.நா.செயலாளரின் அலுவலகத்தில் அமைச்சர் மிலிந்த மொறகொட- கோபி அனானைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது, இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட - கோபி அனானுக்கு விரிவாக விளக்கியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போதே, தற்போதைய சமாதான முயற்சிகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காட்டிவரும் ஆர்வத்தைக் கௌரவிக்கும் வகையில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் இந்த வருடம் உரையாற்ற அவருக்கு அழைப்புவிடுவதாகக் கோபி அனான் தெரிவித்தார்.



திருகோணமலை - தோப்பூர்ப் பகுதியில் இரு முஸ்லிம்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக அங்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திஸ்ஸ கரலியத்த - நாடாளுமன்ற உறுப்பினர் தௌபிக் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# அதிக வெப்பமான சூழ்நிலையில் வெளியில் நடமாட வேண்டாம்!

## வளிமண்டலவியல் அதிகாரி வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போது நிலவும் வெப்பமான சூழல் - செப்ரெம்பர் மாதம்வரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வழக்கமாக இந்தக் காலப்பகுதியில் அதிக வெப்பமான சூழல் நிலவுகின்றபோதும், இம்முறை வழமையை விடக்கூடிய வெப்பம் உணரப்படுகின்றது. கடந்த வருடத்தைவிட இந்த வருடம் வெப்பம் தீவிரப்போக்குடன் இருப்பதால், உடல்வெப்பநிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அதிகளவு நீர் அருந்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

வட - கிழக்குப் பகுதிகளில் தற்போது 32 பாகை செல்சியஸ் முதல் 34 பாகை செல்சியஸ்வரை வெப்பநிலை நிலவுவதாகவும், இது மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிக வெப்பம் நிலவும் சூழலில் பொதுமக்கள் வீட்டுக்கு வெளியே நடமாட வேண்டாம் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

# அரசுக்கான ஆதரவை விலக்கப்போவதாக ஐந்து முஸ்லிம் எம்.பிக்கள் எச்சரிக்கை!

## தனித் தரப்பாக அங்கீகரிக்க வேண்டுமாம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் - முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள வழிசெய்து தரவேண்டும் என்றும்,

இல்லையேல் அரசாங்கத்திற்கு அளித்துவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாகவும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து செயற்படும் பிரதியமைச்சர்களான- அதாவுல்லா, நூர்தீன் மசூர், முகைதீன் அப்துல் காதர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அசீஸ், ஹுஸைன் ஆகியோரே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இவர்கள் தமது உத்தியோகபூர்வமான அறிவிப்பைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகின்றது. அத்துடன், அரசாங்கம் தமது வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறிவிட்டதாகவும் அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஏமாற்றம் வெளியிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

### சண்டிலிப்பாய் பகுதிக்கு

# நிரந்தர பிரதேச செயலரை நியமிக்குமாறு கோரிக்கை!

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வந்த நா.வேதநாயகன், கடந்த ஜனவரி மாதம் முதல் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளமை தெரிந்ததே.

இவரின் இடத்திற்கு இதுவரை பிரதேசசெயலர் எவரும் நியமனம் செய்யப்படவில்லை. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி வரும் எஸ்.செல்வராசா, உதவிப் பிரதேச செயலராக, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரால் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

இதனால், பிரதேசசெயலர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புமாறு இப்பகுதி மக்கள்- யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (100)

# கிராம அலுவலருக்கு புதிய சீருடைகள்!

(மானிப்பாய்)

சகல கிராம சேவையாளர்களினது சீருடையில் புதிய மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது.

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரின் தலைமையில், அரசசேவை தேசிய கிராம அதிகாரிகள் சங்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையை அடுத்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி பெண் கிராம சேவை அதிகாரிகள் தற்போது நடைமுறையிலுள்ள வெள்ளைநிற சீருடைக்குப் பதிலாகப் பச்சைநிறப் புடவையும், ஆண் கிராமசேவை அதிகாரிகள் கறுப்புநிற நீண்ட காற்சட்டையும், வெள்ளை நிறத்திலான சேர்ட்டையும் சீருடைகளாக அணிய வேண்டுமென -

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஏ.ஐ.விக்கிரமவினால் சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (100)


வாழ்க வளமுடன்

12 HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : க.டினோஷன்

முகவரி: கைதடி வடக்கு, கைதடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------

முகவரி:------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------

பெற்றார் ஒப்பம்


## சின்னஞ்சிறு செய்திகள்

### மானிப்பாய் பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின் இவ்வருடத்திற்கான அபிவிருத்தி வேலைகளுக்கென, பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியில் இருந்து பணம் வழங்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பழைய கராஜ் வீதி, சென். அன்ரனிஸ் சனசமூக நிலையம் ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகளுக்கும் அத்துடன், காக்கைதீவு மாதிரிக் கிராம மின்சார விநியோகம் என்பனவற்றுக்குமே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (100)

### தீவுப்பகுதியில் புகையிலைச்செய்கை அதிகரிப்பு

(மானிப்பாய்)

தீவுப்பகுதியில் பல்வேறு இடங்களிலும் தற்பொழுது புகையிலைப் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் பெரிதும் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றனர்.

தற்சமயம் வெங்காயம் அறுவடைசெய்த வயல்நிலங்களில் விவசாயிகள் புகையிலைப்பயிர்களை நடுகை செய்துவருகின்றனர்.

எனினும், கடந்து வருடத்தில் தீவுப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் புகையிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனால், புகையிலையின் விலை வீழ்ச்சியடைந்திருந்தமை தெரிந்ததே. (100)

### பரீட்சை முடிவுகள்

(நவிண்டில்)

அண்மையில் வெளியான க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகளில், வடமராட்சியின் மேலும் இரண்டு பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு:-

*சிதம்பரக் கல்லூரி*
*வல்வெட்டித்துறை*

| | |
|---|---|
| கு.ஜானகி | 7A, B, 2S |
| சி.அருச்சுணன் | 5A, B, 2C, S |
| வி.நிசாந்தன் | 5A, B, 2C |
| க.பிறேம்நாத் | 4A, B, 2C, S |
| த.குருபரன் | 4A, B, 2C, S |

*கொற்றாவத்தை*
*அ.மி.த.க.பாடசாலை*

இளையராஜா பிரதாபா - 5A, 4C (116)

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறுமெனப் பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (17)

### பாலர் கல்விக்கழக பேச்சுத்திறன் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 17 பாலர் பாடசாலை மாணவர்களின் பேச்சுத்திறன் விழா, இன்று காலை 9 மணிக்குக் கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழ், ஆங்கில மொழித்திறன் விருத்தியினை வெளிப்படுத்தும் மாணவர்களினது நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### தீர்த்தோற்சவம்

(நவிண்டில்)

உடுப்பிட்டி துவாளி கண்ணகை அம்மன் ஆலயத் தீர்த்தோற்சவம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. (116)

# பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களே உங்களுக்குச் சில ஆலோசனைகள்

*(நேற்றைய தொடர்ச்சி....)*

**மொழி மூலத்தைக் குறிப்பிடும்போது ஏற்படும் தவறுகள்**

| MEDIUM | MEDIUM | MEDIUM | MEDIUM |
|---|---|---|---|
| SINHALA ○ | SINHALA ○ | SINHALA ○ | SINHALA ○ |
| TAMIL ● | TAMIL ⊠ | TAMIL ○ | TAMIL ○ |
| ENGLISH ○ | ENGLISH ○ | ENGLISH ○ | ENGLISH ● |
| நாகேந்திரராஜா | ரவி | இரகுவரன் | முரளி |

மாணவனொருவனுக்கு வழங்கப்படும் **OMR** தாளிலேதான் தோற்றும் பரீட்சையின் மொழிமூலத்தினைக் குறிப்பிடுவது அவசியமாகும். மேலே குறிப்பிட்ட நாகேந்திரராஜா, ரவி, இரகுவரன், முரளி ஆகிய நான்கு மாணவர்கள்- தமிழ்மொழியிலே தமது பரீட்சையைத் தோற்றுகின்றார்களாயின், நாகேந்திரராஜா ஒருவரே தனது மொழிமூலத்தினைத் தெளிவாக அடையாளப்படுத்திக் காண்பித்துள்ளார். ரவி, இரகுவரன், முரளி ஆகிய மூவரும் தமது மொழிமூலத்தைத் தவறாகக் குறிப்பிட்டுள்ளனர். ரவி குறிப்பிட்டமுறையில் கணினி, அவரது மொழிமூலத்தினை அடையாளம் காணத்தவறுகிறது. இரகுவரன் விட்ட தவறும் கணினியைப் பொறுத்தவரையில் அடையாளம் காண்பதில் சிக்கலை உருவாக்கும்.

அவ்வாறே முரளி விட்ட தவறு காரணமாக அவர் தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவனாக இருந்தபோதிலும், ஆங்கிலமொழியில் தோற்றிய மாணவன் எனக் கருதப்படும் சந்தர்ப்பம் இருப்பதனால், பெறுபேறுகளை உரியநேரத்தில் வெளியிடுவதில் பல்வேறு சிரமங்களை உருவாக்கிவிடும்.

எனவே, மாணவர்கள் தமது மொழிமூலத்தினைப் பரீட்சை நோக்குநர்கள் விடுக்கும் அறிவுறுத்தல்களுக்கமையத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்வது புத்திசாலித்தனமான செய்கையாகும்.

**பாடத்தின் பெயரினைக் குறிப்பிடுவது எப்படி?**

பாட எண்ணிக்கை குறிப்பிடுவது போலவே பாடத்தின் பெயரினையும் **OMR** தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள அடைப்புக்குள் குறிப்பிட்டுக் கொள்ளவேண்டும்.


பொன்னையா அரவிந்தன்
(B.Sc Dip in Ed)
ஹாட்லிக் கல்லூரி


தமிழ்மொழி மூலம் தோற்றும் மாணவனொருவன் தமிழில் தனது பாடத்தின் பெயரினைக் குறிப்பிட்டால் போதுமானது. அவ்வாறு பெயரினைக் குறிப்பிடும்போது, தான் குறிப்பிட்ட பாட எண்ணிற்கான பாடத்தின் பெயரினைக் குறிப்பிடல்வேண்டும்.

| SUBJECT | உயிரியல் |
|---|---|

உதாரணமாக, பாட எண் 09 எனக்குறிப்பிட்ட பரீட்சார்த்தி ஒருவர் அதற்கான பாடத்தினை உயிரியல் என மேலுள்ளவாறு சரியாகக் குறிப்பிடல் அவசியம். அவர் தவறுதலாக அதனை இரசாயனவியல் எனக் குறிப்பிடக்கூடாது.

**பரீட்சை நிலைய எண்ணைக்குறிப்பிடல்**

பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் விட்டுக்கொள்ளும் தவறுகள் தொடர்பாக இறுதித்தீர்வுகள் எடுப்பதற்குப் பரீட்சை நிலைய எண்ணே உதவுகின்றது.

| CENTRE NO | 259 |
|---|---|

இதனால் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்திலே தங்களுக்குப் பல்தேர்வுவினாச் சோதனையின்போது வழங்கப்படும் **OMR** தாளிலே அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள அடைப்பினுள் தங்களது பரீட்சை நிலைய எண்ணினைத் தெளிவாகக் குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும். பரீட்சை நிலைய எண் தொடர்பான விடயங்களைப் பரீட்சை மண்டபத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தந்து உதவிக்கொள்வார்கள். எனவே, மாணவர்களான நீங்கள் இதையிட்டு பதற்றமடையத் தேவையில்லை. அவர்களது உதவியை நாடிப் பெற்றுக்கொள்ளலாம்.

**பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்கும்போது ஏற்படக்கூடிய தவறுகள்.**

பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்க முன்னர், நீங்கள் உங்களுக்கு வழங்கப்பட்ட **OMR** தாளின் பின்புறத்திலே கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை வாசித்துவிட்டு விடையளிக்கத் தொடங்கலாம். ரமணன், காந்தன், மோகன், மயூரன், ரூபன், சாந்தன் ஆகிய 6 மாணவர்கள் பல்தேர்வு வினா ஒன்றுக்கு விடையளித்த விதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ரமணன் → | ① ② ● ④ ⑤ | சரியான முறை |
| காந்தன் → | ① ② ③̸ ④ ⑤ | தவறான முறை |
| மோகன் → | ① ② ③ ④ ⑤ | குறித்துக் காட்டப்படவில்லை |
| மயூரன் → | ① ② ⊗ ④ ⑤ | தவறான முறை |
| ரூபன் → | ① ② ③ ④ ⑤ | தவறான முறை |
| சாந்தன் → | ① ● ● ④ ⑤ | தவறான முறை |

மேற்கூறியவாறு பல்தேர்வு வினாவுக்கு விடையளித்த மாணவர்களுள் ரமணன் மட்டுமே சரியாக **OMR** தாளிலே விடையளித்துள்ளார். ஏனையவர்கள் தவறாக விடையளித்துள்ளனர். எனவே, மாணவர்களாகிய நீங்கள் இத்தவறுகள் தொடர்பாக மிக அலட்சியமாக இருக்காதீர்கள்.

**அமைப்புக் கட்டுரை, கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும்போது ஏற்படும் தவறுகள்**

அமைப்புக் கட்டுரைகளைப் பொறுத்தவரையில் வினாக்களுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள இடைவெளிகளுக்குள்ளே விடைகள் அமைந்திருப்பது அவசியமாகும். இந்த இடைவெளிகளுக்கு மேலாக விடை எழுத முற்படுவதன் மூலம் குறித்தநேரத்தில் செய்து முடிக்கப்படவேண்டிய வினாக்கள் செய்து முடிக்கப்படாது, ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்துவிடும். இதனால், கட்டுரை வினாக்களை முழுமையாகச் செய்துகொள்ள முடியாதநிலை ஏற்படும். இவை பின்னர் பரீட்சைப் பெறுபேற்று குறைவுக்கான காரணங்களில் ஒன்றாக அமைந்துவிடும்.

அடுத்து கட்டுரைவினாக்கள், அமைப்புக் கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும்போது, எழுத்துக்களைத் தெளிவானதாகவும், உறுப்பானவையாகவும் எழுதிக்கொள்ளவேண்டும். பகுதி பகுதியாக கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கும்போது, வினா ஒழுங்குமுறைப்படி விடையளிப்பது அவசியமாகும். மேலும் அமைப்புக்கட்டுரை, கட்டுரைகளுக்கு விடையளிக்கும்போது நேரத்தினை சிறப்பாக முகாமை செய்து கொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும். அத்துடன், கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும்போது, வினா இலக்கங்களைத் தெளிவாக இட்ட பின்னர் விடையளித்து விடையளித்த விடைத்தாள்களில் பக்க எண்களைத் தெளிவாக இட்டு அவற்றினை ஒன்று சேர்த்துக் கட்டிக்கொள்ளுதல் வேண்டும். இதனால் அமைப்புக் கட்டுரை, கட்டுரை வினாக்களுக்கு விடையளிக்கும் போது ஏற்படக்கூடிய தவறுகள் இழிவாக்கப்படுகின்றன. ✸

பல்சுவை அரங்கு

# ஏரியனின் சுபமான பயணம்



ஐரோப்பாவின் தயாரிப்பான ஏரியன் விண்கலம், கடந்த டிசம்பரில் தயாரிக்கப்பட்டதன் பின் முதல் முறையாகக் கடந்த புதனன்று பெரும் சுமையைச் சுமந்துள்ளது. இது அன்று ப்ரெஞ் கயானாவிலிருந்து செயற்கைக் கோள்களை விண்ணுக்குச் சுமந்தது.

இந்தியா மற்றும் அமெரிக்க செயற்கைக் கோள்களையே இந்த விண்கலம் சுமந்துசென்றது.

ஏரியனின் கடந்த 14 பறப்புக்களில் இரண்டு பறப்புகள் அதற்குச் சேதங்களை உருவாக்கியது மட்டுமல்லாது, அது கொண்டுசென்ற செயற்கைக் கோள்களையும் நாசமாக்குவதாகவும் அமைந்தது. இரண்டு தடவை தான் கொண்டுசென்ற செயற்கைக் கோள்களை விண்ணில் தவறான சுற்றுப் பாதையில் விட்டது ஏரியன்.

இம்முறை இந்தியாவின் இன்சாட் 3A செயற்கைக்கோளையும் அமெரிக்காவின் கலக்சி - 12 என்ற செயற்கைக்கோளையும் ஏரியன் சீராக விண்ணில் கொண்டுசென்று செலுத்தியுள்ளது.

# கடந்த ஆண்டே உலகம் சூடானது!

கடந்த 5 ஆண்டுகளில் 2002 ஆம் ஆண்டே வெப்பம் கூடிய ஆண்டாகும் என, ப்ரெஞ்சில் கூடிய விஞ்ஞானிகள் தமது காலநிலைப் பதிவுகள் மூலம் அறிந்துள்ளனர்.

1998 ஆம் ஆண்டே இறுதியாக எடுக்கப்பட்ட வெப்பநிலை கூடிய ஆண்டாக இதுவரை இருந்தது. மனிதனின் செயற்பாடுகளால் 1900 ஆண்டைவிட, தற்போது புவியின் வெப்பநிலை 0.6 சென்ரிகிரேட்டால் உயர்ந்துள்ளது.

இந்த வெப்பநிலை அதிகரிப்பால் வடதுருவமான அந்தாட்டிக் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட 'எல் - நினோ' விளைவினால் வெப்பம், வரட்சி, வெள்ளப்பெருக்கு எனப் பல்வேறு அபரிதமான காலநிலை வேறுபாடுகள் ஏற்பட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.





உருகும் உருவங்கள்

# கென்யாவில் பிளாஸ்ரிக் சவப்பெட்டிகள்



சூழல் சமநிலையைப் பாதுகாக்கும் பொருட்டு, கென்யா- பிளாஸ்ரிக் சவப்பெட்டிகளை உருவாக்கவுள்ளது. சவப்பெட்டி தயாரிப்புக்காக, கென்ய காடுகளில் ஏராளமான மரங்கள் அழிக்கப்படுகின்றன. உயிருள்ள மரங்களை- உயிரற்றவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தக் கூடாது என்கிறார் கென்ய சுற்றாடல்துறை அமைச்சர் திருமதி வன்கறி மாத்தயி. ஆய்வுகளின்படி தினமும் கென்யாவில் 700 மரணங்கள் இடம்பெறுகின்றன. மரத்தினாலான சவப்பெட்டி உபயோகம் உண்மையில் மேற்கத்தைய கலாசாரத்தின் வருகையே என்கிறார் அமைச்சர் மாத்தயி.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## கிரிஃபித்

**அங்கம் – 05**



1909 இல் தயாரான தி லோன்லி வில்லா (THE LONELY VILLA) படத்தில் பாரலல் (PARRELEL) கட்டிங் என்கின்ற எடிட்டிங் முறையைப் புகுதித்தினார். 1912 ஆம் வருடம் தி நியூ யோர்க் ஹற் (THE NEWYORK HAT) படத்தில் முதன்முதலாக ஃபிளாஷ் பக் முறையை அறிமுகப்படுத்தினார். அன்று சாதாரணமாக படங்கள் ஒரு ரீல் அளவிலேயே இருந்தன. ஒரு கதையைச் சரியாகப் படமாக்க ஒரு ரீலின் நீளம் போதாது என்று கருதி, இரண்டு ரீல் படங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். 'ஈனக் ஆர்டன்'( EENAC ARDON) படத்தில் கிரிஃபித் அதையும் அறிமுகப்படுத்தினார்.

பிறகு ஒரு மணிநேரம் ஓடக்கூடிய நீளங்கூடிய படத்தையும் அவரே படைத்து அறிமுகப்படுத்தினார். படம் 1913 இல் வெளியான ஜூடித் ஒவ் ஃபெபூலியா (JUDITH OF FEBULIA) இப்படியாகத் திரைப் படத்தின் பலவித அடிப்படை இலக்கணத்தையும் திரையுலகுக்கு அறிமுகப்படுத்திய மகத்தான இயக்குநராகக் கிரிஃபித் திரையுலக வரலாற்றில் முதலிடம் பெறுகிறார். நகைச்சுவை, மேற்கத்திய (கௌபாய்) பாணி, திடுக்கிடும் படங்கள், சமூகப்படங்கள், சரித்திரப் படங்கள் என்று பலவிதமான முறைகளையும் கிரிஃபித் முதன்முறையாகக் கையாண்டு சாதனை படைத்துள்ளார். ஷேக்ஸ்பியர், சார்ள்ஸ் டிக்கன்ஸ், எட்கர் ஆலன்போ, ப்ரௌனிங் டென்னிசன் போன்ற மிகச்சிறந்த இலக்கியப்படைப்பாளிகளின் படைப்புக்கள் சினிமாவிலும் இலக்கியமதிப்புப் பெற்றன.

1913 ஆம் வருடம் கிரிஃபித் பயோகிராஃப் கம்பெனியிலிருந்து விலகி, மியூச்சுவல் (MUTUAL) கம்பெனியில் சேர்ந்தார். இங்கு தான் 1915 இல் கிரிஃபித்தின் உன்னதமான படம் என்று போற்றப்படுகின்ற 'எ பெர்த் ஒவ் எ நேஷன்' வடிவம் கொண்டது. தோமஸ் டிக்ஸன் (THOMAS DIXON) எழுதிய 'த கிளான்ஸ் மான்' (THE GLANCE MAN) என்கின்ற நாவலின் திரை வடிவம் தான் இந்தப் படம். இந்தப் படத்துக்குப் பிறகு சினிமாவின் பாதையே மாற்றமடைந்தது எனலாம். 1916 இல் வெளியான கிரிஃபித்தின் மற்றொரு படம் 'இன்ரொலரன்ஸ்'. பிரம்மாண்டமான செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் துரதிர்ஷ்டவசமாகத் தோல்வியைத் தழுவியது. பெர்த் ஒவ் எ நேஷன் படத்தின் மொத்த வருமானத்தையும் இந்தப் படத்தில் முதலீடு செய்திருந்தார். கிரிஃபித் புராதான பாபிலோன், பைபிள் கால ஜீடியா, மத்திய கால பிரான்ஸ், புராதன அமெரிக்கா போன்ற நான்கு வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற நான்கு வித்தியாசமான கதைகளை இந்தப் படத்தில் இணைத்திருந்தார். இந்தப் படத்தின் தோல்வியினால் வாழ்க்கையின் பிற்பகுதி முழுவதிலும், அதனால் ஏற்பட்ட கடனை அடைப்பதற்கான முயற்சியிலேயே ஈடுபட நேர்ந்தது இந்த மகத்தான கலைஞனுக்கு.

1919 ஆம் வருடம் கிரிஃபித்- டக்ளஸ் ஃபயர் (DOUGLAS FAIR) சார்லி சாப்ளின், மேரி பிக்சர்ஸ் நிறுவனம் ஆகியோரது கூட்டுறவில் 'யுனைட்டட் ஆர்ட்டிஸ்ட்ஸ்' நிறுவனத்தைத் தொடங்கினார். தன்னுடைய கடன் தொல்லையால் விரைவிலேயே அந்த நிறுவனத்திலிருந்தும் கிரிஃபித் விலக நேர்ந்தது அதற்குப்பிறகு



'பராமவுண்ட்' நிறுவனத்துடன் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தம், கிரிஃபித்தின் கிரையுலக வாழ்க்கைக்கு ஓர் முடிவுகட்டியது. அதிலிருந்து அவர் 1948 ஆம் வருடம் மரணமடைவது வரையிலும் விரக்தியும், ஏகாந்தமுமான ஒருவிதத் தனிமை வாழ்க்கையை நடத்தினார்.

திரைப்பட வரலாற்றை ஆராயும்போது, தனது சொந்தத் துறையிலிருந்து தூக்கியெறிப்படுகின்ற நிகழ்ச்சி கிரிஃபித்துக்கு மட்டுமே நேர்ந்த விபத்து என்று சொல்ல முடியாது. இத்தகைய ஒருநிலை வேறுபல மாபெரும் இயக்குநர்களையும் பின்னாளில் வெகுவாகப் பாதிக்கவே செய்திருக்கின்றது. படத்தயாரிப்புக்கான பெருத்த முதலீடும், தோல்வியும் மகத்தான கலைஞர்களை ஈவிரக்கமின்றி நிறையவே பழிவாங்கியிருக்கிறது.

இன்ரொலரன்ஸ் படம் வெற்றி பெறவில்லையெனினும், செர்காய் எம். ஐஸென்ஸ்டைன், விஸ்வெலாட் புடோவ்கிவ் (VESVOLOD PUDOKIV) போன்ற மகத்தான கலைஞர்கள் இதனால் பெருமளவு ஈர்க்கப்பட்டனர்.

1919 ஆம் வருடம் வெளியான கிரிஃபித்தின் புரோக்கன் புளொசம்ஸ் (BROKEN BLOSSOMS) 1920 இல் வெளியான 'வே டவுன் ஈஸ்ட்' (WAY DOWN EAST) இரண்டும் ஒப்புவமை இல்லாத மிகச்சிறந்த படைப்புகள். அவரது வாழ்வின் பிற்பகுதியில் கொஞ்சமாவது நிம்மதியுடனிருக்க இவை ஓரளவு உதவின எனலாம்.

(தொடரும்)

# செவ்வாயில் ஓட ரோபோ வாகனங்கள்



செவ்வாய் கிரகத்தில் ரோபோ ஆய்வு வாகனங்களைக் கொண்டுசென்று இறக்குவதற்கு முன்பாக, அவை தற்போது சிலி நாட்டின் அர்ராகாமா பாலைவனத்தில் ஓடவிடப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. 'ஹைபேரியன்' என அழைக்கப்படும் இவ் வாகனங்கள் ஏற்கனவே செவ்வாய்க் கிரகத்தின் தரைத்தோற்றத்தை ஒத்த ஆர்ட்டிக் பனிப்பகுதியிலும் ஓடவிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது என இந்த ரோபோ வாகனங்களை உருவாக்கிய அமெரிக்க மெலோன் பல்கலைக் கழகத்தின் ரோபோட்டிக்ஸ் பகுதித்திட்டத் தலைவர் டேவிட் வெட்டர்கிறீன் கூறுகிறார்.

# பூமியின் ஒரு துண்டா நிலவு?



நாம் தினமும் காணும் நிலவு பூமியின் ஒரு துண்டே என்கிறார் ஐரோப்பிய விண்வெளித் திட்டத்தின் பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி மனுவல் கிராண்ட். இது தொடர்பான மேலதிக ஆய்வுகளை ஜுலையில் மேற்கொள்ள ஐரோப்பிய விண்வெளித் திட்டம் ஆயத்தமாகிவருகின்றது.

## ஆய்வு ஆரம்பிக்கின்றது

இந்த ஆய்வுக்காகச் செல்லவுள்ள செயற்கைக்கோளான ஸ்மார்ட் - 1 தற்போது நெதர்லாந்தில் இறுதிப் பரிசோதனைகளுக்கு உட்பட்டுவருகின்றது. இதன்மூலம் நிலவை எக்ஸ்ரே வரைபடம் பிடித்து ஆய்வு செய்வதன்மூலம் நிலவுக்கும் - பூமிக்கும் இடையேயான தொடர்புகள் மேலும் உறுதியாகி ஒரு புதிய துறையே உருவாகும் என்கிறார் பேராசிரியர் கிராண்ட்.

நிலவு தோன்றியதற்கான பல கொள்கைகள் கூறப்பட்ட போதிலும், இவற்றில் முக்கியமானது ஆரம்பக்கட்டத்தில் பூமியை மற்றுமோர் கிரகம் மோதியபோது வெடித்த துண்டே நிலவானது என்பதாகும். இது உண்மையாக இருப்பின் நிலவு பூமியினைவிட இரும்புத்தாது குறைந்த வளமுடையதாக இருக்க வேண்டும். இந்தத் தாதுக்களின் அளவுகளையே ஸ்மார்ட் விண்கோள் அளவிடவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.





# டோலியின் சடலம் பார்வைக்கு

பரம்பரை அலகுகளில் ஏற்பட்ட சில குறைபாடுகளால், நுரையீரல் நோய் ஏற்பட்டு இறந்தது. டோலியின் பதப்படுத்தப்பட்ட உடல், ஏற்கனவே நவம்பர் 2000 ஆம் ஆண்டு இறந்த மற்றுமோர் குளோனிங் ஆடான 'மோராக்' குடன் காட்சிக்கு வைக்கப்படும்.

ஜேம்ஸ் வட்சனும், பிரான்சிஸ் கிறேய்க்கும் இணைந்து டி.என்.ஏயை கண்டுபிடித்ததன் 50 ஆம் ஆண்டு நிறைவையொட்டி இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



உலகின் முதலாவது குளோனிங் விலங்கான டோலி ஆட்டின் சடலம் பதப்படுத்தப்பட்டு, எடின்பரோ ரோயல் அருங்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்குக் கடந்த வெள்ளிமுதல் வைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன் இறந்த இந்தக் குளோனிங் முறையில் பிறந்த ஆடு, இந்த அருங்காட்சியகத்தின் நிரந்தர காட்சிப் பொருளாக வைக்கப்படும்.

டோலி, 1996 ஆம் ஆண்டு ஜுலை 5 ஆம் திகதி குளோனிங் முறையில் பிறந்தது எனினும், அது பின்னர்

# வாரம் ஒரு யோகாசனம்

## சிரசாசனம்

முன் சர்வாங்கத்தில் இருந்தபடி மெள்ள கழுத்தையும் உயர்த்தி உச்சந்தலை தரையில் படும்படி இருக்கவும், தலைப்பக்கத்தில் முழங்கைகளை ஊன்றிப் பிடரிப்பக்கம் கைகளைச் சேர்த்து வைத்துக்கொள்ளவும். தலைக்கு தலையணை பாவித்தால் நன்று. இவ்வாறு 5 நிமிடம் இருந்தால் போதுமானது.

## சிரசாசனத்தின் நன்மைகள்

ஆசனங்களுக்கு இது தலைவனைப் போன்றது. மூளைக்கு இரத்தோட்டம் சீராக நடைபெறும். ஆலோசனை செய்யும் திறன்கூடும். மூளைக் கோளாறு, மனச் சோர்வு அடைபவர்களுக்கு நன்மை அழிக்கும். அறிவு, துணிவு, ஊக்கம் முதலியவை நன்றாக வளர்ச்சி பெறும். தலை, கண், காது தொடர்பான நோய்களைத் தீர்க்கும், தலைவலி, கண் வலி, காது வலி உள்ள நேரங்களில் இவ்வாசனத்தைச் செய்யக்கூடாது. இந்த ஆசனத்தைக் காலையில் மட்டுமே செய்தல் வேண்டும்.



கற்றுத்தருபவர் – மா.மகாநேசன் (கரவெட்டி)

# திரை விமர்சனம்

# ராமச்சந்திரா



அரசியலுக்கு ரவுடிகள் வரக் கூடாது. வந்தாலும் அரசியல் தலைவர்கள் அதை அனுமதிக்கக்கூடாது. இதுதான் படத்தின் கரு. இதைச சொல்லிமுடிப்பதற்குள் தட்புட்டென்று குதிக்கும் சத்யராஜ், சில நேரங்களில் அருகில் அம்புலன்ஸ் வைத்துக் கொண்டு நடித்தாரோ என்று அஞ்ச வைத்திருக்கிறார். அப்படி ஒரு சத்தம், கூச்சல், இரைச்சல்... அவர் அடிவயிற்றிலிருந்து தம் கட்டும்போதெல்லாம் ஸ்கிரீன் கிழிந்துவிடுமோ என்ற பயம் வருகிறது. இனி சத்யராஜ் காக்கிச்சட்டை போடக்கூடாது என்று யாராவது கோர்டில் தடை உத்தரவு வாங்கினாலும் ஆச்சரியமில்லை.

ஹீரோவின் கர்ப்பிணி மனைவியை கடத்திக்கொண்டு போய், அந்தக் கசற்றை மரியாதையாகக் கொடுத்துவிடு என்று வில்லன் கோஷ்டி மிரட்டுவது க்ளைமாக்ஸ்.

இருந்தாலும், காக்கிச்சட்டையைப் போட்டதும், அதேமிடுக்குடன் சத்யராஜ் பேசும் 'வெடுக் வசனங்கள்' தூள். கோர்ட்டில் போலீஸ் சாட்சி ஏற்கப்படமாட்டாது என்ற நீதிபதியை நோகடிக்கும் விதமாக வரிசையாகப் போலீஸ் சாட்சிகளை அவர் அனுப்பும்போது உற்சாகம். வில்லன் ஆசிஷ் வித்யார்த்தியின் தம்பியை வலுக்கட்டாயமாகப் போலீஸ் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு ஸ்ரேஷன் ஸ்ரேஷனாக கொண்டுபோய் சுளுக்கு எடுப்பது சுவாரஸ்யம். இவருக்குத் துணையாகப் பாண்டியராஜன் கொன்ஸ்டபிள் வேடம் போட்டிருக்கிறார். குதிரை புல்லைத் தின்றிருக்கிறது. பரவாயில்லை ரசிக்கமுடிகிறது.

பொம்மைபோல் வந்துபோகிறார் விஜயலட்சுமி. பெற்ற பிள்ளையைப் பறிகொடுத்துவிட்டு, கதறும் காட்சிகள் பரிதாபம்.

ஸ்ரீமன் வழக்கம்போல் நடிப்பைப் பொழிகிறார். அவருடைய தங்கை அபிநயஸ்ரீயை வில்லன் பொன்னம்பலம் கதறக்கதறக் கற்பழித்துக் கொல்வது மிகவும் பழைய வில்லன்களின் ஸ்டைல். பொன்னம்பலத்தை ஸ்ரீமன் கொல்கிறார். வில்லனின் தம்பியைப் பாண்டியராஜன் கொல்கிறார். அவரை இவர் கொல்கிறார், இவரை அவர் கொல்கிறார். மொத்தத்தில் நம்மை...

ஆசிஷ் வித்யார்த்தி, ராஜ்கபூர் என்ற இரண்டு வில்லன்களுமே அடிவயிற்றில் திகில் ஏற்படுத்துகிறார்கள். அடிக்கொரு கானா போட்டு தன் பங்கிற்குத் தேவாவும் அதையே செய்திருக்கிறார்.

அட ராமச்சந்திரா...

-துஷி

# குழந்தைகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய பருவம்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

இந்த வயதில் பிள்ளைகள் வீரனாகவே வாழ விரும்புவர். தாம் உயர்ந்தவர்கள் என்று நினைப்பவர்களைப் பின்பற்றி வாழ ஆசைப்படுவர். ஆண்பிள்ளை விளையாட்டில் ஆசையுள்ள பிள்ளையானால், விளையாட்டு வீரரைத் தனது கதாநாயகனாக்குவார்கள். பெரும்பாலும் வயதுபோனவர்களையல்ல, இளம் வயதினரைப் பார்த்தே பின்பற்றுவர். அவர்களைப்போல் வீரச் செயலைத் தாமும் பின்பற்றவே பார்ப்பர். ஆனால், இன்று எமது பிள்ளைகள் யாரைத் தமது கதாநாயகனாக எண்ணுகின்றனர்? சினிமாப் படங்களில், தொலைக்காட்சியில் சண்டைபிடிக்கும் போலி முகங்களையே தமது கதாநாயகனாக்குவர். பெரும்பாலும் எமது பிள்ளைகள் தமது கதாநாயகனாக அப்பா - அம்மாவைப் பின்பற்றும் விதத்தில் நாம் வாழப்பழக வேண்டும். ஆசிரியர்களும் அவ்வாறே.

இந்த வயதிலுள்ள பிள்ளைகள் ஓர் பிரசங்கத்தை, உரையைக்கேட்டு அதில் குறிப்பெடுத்துப் படிக்கும் திறமை இருக்காது. ஏதாவது தமது கைகளால் செய்து, செயன்முறையின் அனுபவத்தினூடாகவே கல்வியைப்பெற்றுத் தமது அறிவை வளர்க்க முனைவர். அவதானத்தோடு ஒரு பிரசங்கத்தைக் கொஞ்சநேரமே கேட்பர். மணித்தியாலக் கணக்கில் பொறுமையோடு இருந்து அவதானத்தைச் செலுத்த அவர்களால் முடிவதில்லை.

எண்ணத்தில் உள்ளவற்றைப் புரிந்துகொள்வதில் மிகவும் கஷ்டப்படுவர். அதாவது உருவம், மணம், நிறம் இல்லாதவற்றைக் கற்பனையில் அறிவது கடினம். உதாரணமாகப் "பக்தி" என்பதனைப் புரிந்துகொள்வது கடினம். இப்படிப்பட்டவற்றிற்குத் தமக்கு விளங்குவதுபோல் தலையசைத்துப் பதில் சொன்னாலும், உண்மையில் அவர்களுக்கு விளங்குவதில்லை. இப்படிப்பட்ட எண்ணத்தை விளங்கிக்கொள்ளப் பதினொரு வயதாவது செல்ல வேண்டும்.

இந்த வயதிலுள்ள பிள்ளையை மற்றப் பிள்ளைகளுடன் பெற்றோர் ஒப்பிடுவர். அது தவறானதாகும். "அண்ணா இப்படி இல்லை, அக்கா உன்னைப்போல இல்லை" என்று ஒப்பிடுவதை விரும்பமாட்டார்கள். அண்ணன் வேறுபட்ட ஒருவர், அக்கா வேறுபட்ட ஒருவர் என்பதை மனதில் கொள்வது நன்று. அதுமட்டுமல்ல, ஒரு பிள்ளையை ஒரு மாதிரியும், மற்றப் பிள்ளையை வேறொரு மாதிரியும் கவனிப்பதையும் பிள்ளைகள் விரும்புவதில்லை.

இந்த வயதிலுள்ள பிள்ளைகள் ஆன்மீகம், மதத்தைப் பற்றிச் சிந்திப்பது அதன் அளவைப் பார்த்தேயாகும். நோக்கத்தைப் பார்ப்பதல்ல. உதாரணமாக - ஒருபிள்ளை கோபம் வந்ததால் வீட்டில் ஒரு பீங்கானைக் கீழே எறிந்து உடைத்துவிட்டது. மற்றொரு பிள்ளை தாய்க்கு உதவி செய்யப்போய்த் தவறுதலாக ஆறு பீங்கான்களை உடைத்துவிட்டது. இங்கே இந்த இருவரிலும் யார் அதிகம் பிழைவிட்டார்கள் என்று இந்த வயதிலுள்ள பிள்ளைகளிடம் கேட்டால் ஆறு பீங்கான்களை உடைத்தவரே என்பர். நோக்கத்தைப் பார்க்காது அளவையே பார்ப்பர்.

நீதி, நேர்மை பற்றியும் இந்த வயதிலுள்ள பிள்ளைகளிடம் வேறுபட்ட அபிப்பிராயம் இருக்கும். சனிக்கிழமை காலையில் விளையாட எல்லோரும் சேர்ந்து ஆயத்தமாகியிருந்தனரென வைத்துக்கொண்டால், அன்று காலை மழை பெய்கிறது. இதைக் கண்டதும் இது பெரிய அநியாயம் என எண்ணுவர். யாரோ வேண்டுமென்று செய்ததுபோன்று உணருவர்.

வளர்ந்தவர்கள் சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தாலும், விசேடமான சந்தர்ப்பங்களில் அச்சட்டதிட்டங்களை மாற்றுவர். ஆனால், இந்த வயதிலுள்ளவர்களுக்குச் சட்டதிட்டங்கள் கடவுளால் தரப்பட்டது, யாராலும் அதை மாற்றமுடியாது என எண்ணுவர்.

சட்டதிட்டங்கள் மாறக்கூடியது. மனிதருக்காகவே சட்டதிட்டங்களுள்ளன. சட்டதிட்டங்களுக்காக மனிதர் இல்லை. இந்த விதத்தில் நடுநிலை வகிக்கக்கூடியவர்களாகப் பெரியவர்கள் நடமாட வேண்டும். பெரியவர்கள் சொன்னால் சொன்னதுதான். அதை மாற்றமுடியாது என்று நடமாடினால், பிள்ளைகளும் அதைப் பார்த்துப் பழகுவர்.

(தொடரும்....)

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து.*
*- திருக்குறள்*

# நமது நோக்கு

## அவலத்துள் வாழ்வு!

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மன்னார் பகுதியில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது - இந்திய மீனவர்களுக்கும், உள்ளூர் மீனவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதல்களின் ஈரம் காயுமுன்பே -

வடமராட்சியில் மற்றுமொரு அத்துமீறல் நிகழ்ந்திருக்கின்றது. இரு தினங்களுக்கு முன்னர் - 150 இற்கும் மேற்பட்ட வள்ளங்களில் இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைய முற்பட்ட இந்திய மீனவர்களைத் தடுப்பதற்கு முயற்சித்த உள்ளூர் மீனவர்கள், கடற்படையால் கரையை நோக்கி விரட்டப்பட்டனர்.

இந்திய மீனவர்களின் உள்நுழைவைத் தடுப்பதில் கவனம் செலுத்தாமல், உள்ளூர் மீனவர்களை விரட்டுவதிலேயே கடற்படையினர் குறியாக இருந்ததாக உள்ளூர் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

தாம், இந்திய மீனவரின் அத்துமீறல் குறித்து கடற்படையினருக்குப் புகாரிட்டபோது, எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது அவர்கள் வாளாவிருந்ததால் - இனியும் பொறுக்க முடியாது என்ற கட்டத்திலேயே, இந்திய மீனவரைத் தாமாவது தடுத்து நிறுத்தலாம் என்று புறப்பட்டதாக உள்ளூர் மீனவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், கடற்படையோ கொழும்பிலிருந்து ஊடகங்களுக்கு வெளியிட்ட தகவல்களின்படி -

இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்த இந்திய மீனவருக்கும், உள்ளூர் மீனவருக்கும் இடையே ஏற்படவிருந்த முறுகல் நிலையைத் தாமே முன்னின்று தணித்ததாகக் கூறியிருக்கிறது.

உள்ளூர் மீனவர்கள் - கடற்படையின் இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லையென்றே கூறுகின்றனர். இந்திய மீனவரின் அத்துமீறலை, கடற்படை வேண்டுமென்றே, திட்டமிட்டே அனுமதித்ததாகவும், தாம் நியாயம் கேட்டபோது - அடித்து விரட்டப்பட்டுத் துன்புறுத்தப்பட்டதாகவும் அவர்கள் கோபக் குரலெழுப்புகின்றனர்.

மன்னார்க் கடற்பகுதி, இந்தியாவின் பொருளாதார வலயத்திற்கு அருகாமையிலிருக்கிறது என்றும் - தாம் எல்லை தெரியாமல் வந்து மீன்பிடித்ததாகவும் - இந்திய மீனவர் தரப்பில் தமது அத்துமீறலை நியாயப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் -

வடமராட்சிக் கடலில் அவர்கள், எவ்வாறான காரணத்தை முன்வைக்கப் போகின்றார்கள் என்ற நியாயமான கோபம் வடமராட்சிப் பகுதி மீனவரிடையே ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே - வடமராட்சிக் கடற்பகுதிகளில் கடற்படையின் நடவடிக்கைகளால் - மீனவர்கள் பலர் கொல்லப்பட்டும், படுகாயப்படுத்தப்பட்டும், கடற்தொழிலுபகரணங்கள் சிதைக்கப்பட்டும் - அங்கு வாழ்ந்துவரும் மீனவர்கள் ஆண்டுக்கணக்கில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகையில் - தற்போதுதான், ஓரளவாவது கடற்தொழிலைச் சீராக மேற்கொண்டு வருகிறோம் என மீனவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட ஆரம்பித்திருக்கும் வேளையில் - இந்திய மீனவர் வடிவில் அச்சுறுத்தல் மீண்டும் உருப்பெற்று வருகின்றது.

இந்திய மீனவரின் அத்துமீறலும், கடற்படையின் அச்சுறுத்தலும் மட்டுமன்றி - வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளின் ஊடுருவலும் கடலில் அதிகரித்திருப்பதாக உள்ளூர் மீனவர்கள் கூறுகின்றனர்.

மீன்களும், கடலட்டைகளும் பிடிப்பதாக நுழையும் இந்த வெளிநாட்டுப் படகுகள் சிலவற்றுக்கு - இலங்கை முதலீட்டுச் சபையின் அனுமதியும் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தாக்குதல் ஒன்றுக்கு உள்ளாகி மூழ்கிய சீனநாட்டு ட்ரோலர் படகும் இந்த வகையில் வடகடலில் இலங்கை முதலீட்டுச்சபையின் அனுமதியுடன் உள்நுழைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வட - கிழக்கைத் தாயகமாகக் கொண்டுள்ள தமிழ்மக்களின் பொருளாதார வளங்களில் பிரதானமான, முக்கியத்துவமிக்க இடத்தை கடற்பகுதிகள் பெற்றிருக்கும் நிலையில், தமக்குச் சொந்தமான வளத்தைக் கூடச் சுதந்திரமாக நுகரமுடியாது தடுக்கப்பட்டிருப்பதுடன், கண்முன்னமே அந்நியர்கள் அந்த வளத்தை அபகரித்துச் செல்லவும் - அதற்கு அரசாங்கமும், கடற்படையும் அனுசரணையாக இருப்பதும் கண்டு ஆதங்கத்திலும், வேதனையிலும் வாழ்பவர்களாகவே மீனவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கின்றனர்.

சமாதான காலத்திலும் இத்துயர் மிகுந்த வாழ்வில் சிக்கி உழலும் அவர்களுக்கு விடிவு கிடைக்காவிட்டால் - அத்துமீறலும், அடாவடித்தனமும் தொடர்கதையானால் அமைதிக்கும், சுமுக வாழ்விற்கும் எவ்வித அர்த்தமும் இல்லாமலே போய்விடும்.

# கலைக்கான உயிர்த்துடிப்புள்ள கரு போர்க்களத்தில்தான் கிடைக்கிறது

## மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வில் தமிழினி உரை

மானுடத்தின் தமிழ்க்கூடலில் இன்று இங்கே நாம் கூடி நிற்கின்றோம். எமது கலை வெளிப்பாடுகளை வெளிப்படுத்துகின்றோம். இவை வெறும் கலைகள் இல்லை. எமது உள்ளத்தின் உணர்வுகள். இன்று எமது தலைநகரில் இவற்றை வெளிப்படுத்துகின்றோம். இதற்கான நிலைக்களத்தை எமது 17,000 இற்கு மேற்பட்ட மாவீரர்களின் தியாகங்கள்தான் உருவாக்கியுள்ளது.

- இவ்வாறு திருமலையில் நடந்த மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி கூறினார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் -

கலை, பண்பாட்டு அம்சங்களூடாக இனத்தின் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றது. விடுதலைப் போரின் பல இடையூறுகளை நாம் கண்டிருக்கின்றோம். எமது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத நாட்களை நாம் கடந்து வந்திருக்கின்றோம். பூட்டுப்போடப்பட்டு வாய்திறவாப் பாலங்களைக் கடந்து வந்திருக்கிறோம்.

எமது உணர்வின் வெளிப்பாடுகளை, எமது போராட்டத்தின் நிலையை எமது கலைகள் வெளிப்படுத்தின, வளப்படுத்தின.

கலை இலக்கிய வெளிப்பாடு காலத்தை வெளிப்படுத்துகின்ற வரலாறாகின்றது. எமது வரலாறு வித்தியாசமானது. எமது கலைகள் வித்தியாசமானது. இங்கு வாழும் ஒவ்வொருவரின் எண்ணங்களிலும் உயிர்த்துடிப்புள்ள உண்மைகள் துடித்துக்கொண்டிருக்கின்றன.

எமது கலைகள் வெறும் கற்பனைகள் இல்லை. யதார்த்தம் மட்டுமே கலையாக வெளிப்படுகின்றது.

போர்க்களம் எவரும் வெறுக்கும் விருப்பமற்ற ஒருபக்கமாகும். ஆனால், அது எமக்குத் தேவையாக இருக்கின்றது. நமது தேவைகள் என்ன என்பது நமது மக்களுக்குப் போர்க்களங்களில் வெளிப்பட்டது. போர்க்களத்தில்தான் கலைக்கான உயிர்த்துடிப்புள்ள கரு கிடைக்கின்றது. உலக வரலாற்றில் பல போர்க்கால இலக்கியங்கள் எழுந்துள்ளன. அந்த வகையில் எமது மண்ணிலும் இலக்கியங்கள் தோன்றின.

போரின் கொடூரத்தால் எமது போராளிகள் நாளாந்தம் 30 பேருக்குமேல் உயிர்த்தியாகம் செய்தகாலம். மக்கள் எந்த வசதிகளுமின்றி வாடினர். ஆனாலும் எமது மக்கள் அந்தப் போராட்டத்தை விருப்புடன் முன்னெடுத்தனர். இது எப்படி நடந்தது? அங்கிருந்த கலைஞர்களின் வெளிப்பாடுகளைப் போரின் தாக்கம் உண்மையுடன் உணரப்பட்டது.

அந்தக் கலைஞர்கள், போராளிகளை விட ஒருபடி உயரத்தில் வைத்துப் பார்க்கப்பட வேண்டியவர்கள். கலைஞர்களின் கலை வெளிப்பாடுகளின் தாக்கமே போரின் நிதர்சனத்தை மக்களை நோக்கி நகர்த்தியது. இது கலைஞர்களின் வெளிப்பாடுகளால் நிகழ்ந்தது.

எமது உணர்வுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். எமது உள்ளுணர்வுகள் வெளிப்படுத்தி எமது உள்ளத்தைத் திறப்பதாக கலைகள் அமையவேண்டும். அந்தப் பணியை எமது கலைஞர்கள் ஆற்றுகின்றனர். எமது தேசியம் உடைக்கப்பட்டது. எமது தேசம் அழிக்கப்பட்டது

இன்று வீட்டின் மூலையில் தொலைக்காட்சியில் வெறும் கனவுத் தொழிற்சாலையில் உருவான யதார்த்தத்திற்குப் புறம்பான நிகழ்ச்சிகள் காட்சிப்படுத்தப்படுகின்றது. இவை எம்மைக் கனவுலகில் சஞ்சரிக்க வைக்கின்றன. எமது தேசத்தின் உண்மைநிலையை, தேசத்தின் மீது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பை உணர்வதை இவை தடுக்கின்றன. அந்த யதார்த்தமற்ற குப்பைகளில் வரும் நாயகன் - நாயகிகளுக்காக நாம் உருகுகின்றோம்.

ஆனால், எரியும் எமது தேசத்தின் யதார்த்தம் எமக்குப் புரிவதில்லை. எமது உள்ளத்து உணர்வுகள் இந்நிகழ்வுகளால் மழுங்கடிக்கப்படுகின்றன. இந்நிலையை நாம் மாற்றவேண்டும்.



அந்தவகையில் இந்த விழாவும், நிகழ்வுகளும் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளது.

நாங்கள் காலம் காலமாகக் காத்துவந்த வரையறைகளைத் தாண்டிப் புதிய இலக்கணங்களை வகுக்க வேண்டும். இதனை எமது கலைகள் நிச்சயம் நிகழ்த்தும் என்றார்.

## ரோக்கியோ உதவி மாநாட்டில் 300 கோடி டொலர் கிடைக்கும்!

### மத்தியவங்கி ஆளுநர் நம்பிக்கை

எதிர்வரும் ஜுன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் 300 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியாகக் கிடைக்கும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் எ.என்.ஜெயவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வொஷிங்ரனில் நேற்று நடந்த முன்னோடிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றிருந்தபோதே, மத்திய வங்கி ஆளுநர் எ.எஸ்.ஜெயவர்த்தன இக்கருத்தை வெளியிட்டார்.

இந்த உதவித்தொகை இலங்கையில் வருமானத்தை விட இருபது மடங்கு அதிகமானதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் வட-கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு ஆறு வருடங்களில் 120 கோடி டொலரைச் செலவிட வேண்டியிருப்பதாகப் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## பரீட்சைப் பெறுபேறு மீளாய்வு மே 12 முன் விண்ணப்பிக்கவும்

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மே 12 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மீளாய்வு செய்யப்படும் பாடம் ஒன்றிற்கு 100 ரூபா கட்டணம் அறவிடப்படும் என்றும், எந்தத் தபாலகத்திலேனும் பணத்தினைச் செலுத்தி, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகள், அதிபர்களூடாகவே மீளாய்வு விண்ணப்பங்களை அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## சீருடைத் துணி பெறுவதற்கு அலைந்து திரியும் மக்கள்!

பாடசாலைச் சீருடைத்துணி விநியோகம் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்க ஆரம்பித்ததையடுத்து - மக்கள், பிரதேச செயலகங்களுக்கும், கிராம அலுவலர் பணிமனைகளுக்கும் அலைந்து திரிவதைக் காணமுடிகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிட்ட தினத்திலேயே சீருடைத் துணிகளை வழங்குவதாகவும், பின்பு எஞ்சியவற்றை அனுப்பிவிடுவதனால் மக்கள் அலைந்து திரிய வேண்டியுள்ளதாகவும், கடந்த காலங்களைப்போல் பாடசாலைகளின் ஊடாக சீருடைகள் வழங்கினால் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தமது மக்கள் தெரிவித்துள்ளனர். (25)

## மீண்டும் மரணதண்டனை; ஆயர்கள் மாநாட்டில் எதிர்ப்பு!

(கொழும்பு)

இலங்கையில் மரணதண்டனை நடைமுறை மீண்டும் அமுலாக்கப்படுவதற்கு பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ஆயர்கள் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் தமது எதிர்ப்பை வெளியிட்டார். நீதியின் பெயரால் உயிர்கள் கொல்லப்படுவதை அனுமதிக்க முடியாது. எனினும், குற்றச் செயல்கள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த மரணதண்டனை தீர்வல்ல. குற்றச்செயல்களைச் சமூகரீதியாகக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் தெரிவித்தார்.

## சமாதானத் தீர்வு முயற்சிகள் குறித்து கனடா அரசாங்கம் திருப்தி தெரிவிப்பு!

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கில் கனடாவின் - ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான இராஜாங்க அமைச்சர் டேவிட் கில்கோர் கலந்துகொள்கிறார்.

நேற்றும், இன்றும் வொஷிங்ரன் நகரில் நடைபெற்றுவரும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளதாக டேவிட் கில்கோர் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணும் பொருட்டு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து கனடா பூரணதிருப்தி அடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வகையில் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு எந்தளவுக்கு உதவலாம் என்பது தொடர்பாகச் சர்வதேச சமூகம் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைத்துள்ளதை வரவேற்பதாகவும் கில்கோர் கூறியுள்ளார்.

# விசேட பிராந்தியங்களின் மத விழுமியங்களுக்கு உத்தரவாதம் கொடுத்த சீன மத்திய திட்டமிடல் குழு

## சுயநிர்ணயம் ஒரு பார்வை

பகுதி-29

இந்தவகையில், சீனா - திபெத்திய உறவினை "தாய் நாட்டின் - விரிவான குடும்பம்" (Extented family of the Motherland) என்ற அடிப்படையில் தீர்க்கப்பட்டதாக 1951 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கூறுகின்றது.



ஆனால், திபெத்தின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவுககுச் சீனாவின் கம்யூனிஸ் மத்தியக் குழுத் திட்டமிடல் முறையை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அவரது சமயக் கோட்பாடுகள் இடங்கொடுக்கவில்லை.

இதனால், பௌத்த மதரீதியான கலாசார மற்றும் விழுமியங்களுக்கும், திபெத்திய மொழிகளுக்கும் கம்யூனிஸம் அச்சுறுத்தலாக அமையும் என தலாய் லாமா கருதினார்.

இதனால் அவர் - திபெத்திற்கு வேண்டிய சீர்திருத்தங்களைத் தாமாகவே மேற்கொள்ளவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கைகளின் அடிப்படைக்கு, கம்யூனிஸம் - பௌத்த மதத்தினை நசுக்கிவிடுமென திபெத் கருதியமையே காரணமாகும். 1956 ஆம் ஆண்டு திபெத்திற்குள் கம்யூனிஸத்தினை வலிந்து புகுத்துகின்ற எண்ணம் சீனாவிற்கு இல்லை என்பதனை இந்திய அரசுக்கு, முன்னாள் சீனப் பிரதமர் சூ என் லாய் (Zhou En Lai) தெளிவாக வலியுறுத்தியிருந்தார். எனினும்- தலாய் லாமா 1959 ஆம் ஆண்டு மார்ச மாதம் 11 ஆம் திகதி திபெத்தினைச் சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்திவிட்டு, இந்தியாவிற்குள் தப்பியோடிவிட்டார்.

இதையடுத்து சீனா - திபெத்திற்கு வழங்கிய விசேட அதிகாரப் பகிர்வு முறைமை நடைமுறைப் படுத்தப்படாமல் - 1965 ஆம் ஆண்டு மீண்டும் இறுக்கமான - சீனாவின் ஏனைய சிறுபான்மையினருக்குக் கொடுக்கப்படும் சுயாட்சி வரையறைகள்போல் திபெத்துக்கும் மட்டுப் படுத்தப்பட்ட அதிகாரமே வழங்கப் பட்டது.

இவ்வாறு திபெத் மக்களதும் அரசியல் நடவடிக்கைகள் காணப் பட்டதால், சீனா - வெளியுலகிற்கு புதிய பாணியிலான அதிகாரத்தினை திபெத்திற்கு அளித்துள்ளதாக எடுத்துக்கூறுவதற்கு இயலாமல் போய் விட்டது. இப்பொழுது திபெத்தியப் பிரச்சினையைத் தேசிய ஒருமைப் பாட்டுக்கான பிரச்சினையாகவே சீனா கருதுகின்றது. இதனால் திபெத்தில் சுயாட்சிக்கான எந்தவொரு வடிவமும் காணப்படவில்லை.

மேலும், சீனாவின் சாதாரண அரச அவைகள் அனுபவிக்கும் சுயாட்சி அதிகாரங்களையும்விடக் குறைவாகவே திபெத்தின் அதிகாரங்கள் இப் பொழுது காணப்படுகின்றன.

### சின்சியாங் பிரதேச அதிகாரப் பகிர்வு

சீனாவினது இன்னொரு சர்ச்சைக்குரிய பிரதேசமாகக் காணப் படுவது சின்சியாங் (Xinjiang) பிரதேசமாகும். இங்கு இஸ்லாமிய மதத்தினைப் பின்பற்றும் "உய்கர்" (Uygur) இனமக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

சின்சியாங் பிரதேசத்தின் எல்லைப்பிரதேசமாக அல்லது அயல் நாடாக முன்பு சோவியத் ஒன்றியம் காணப்பட்டது. தற்பொழுது சோவியத் ஒன்றியம் உடைந்ததன் பின்னர் துர்க்மெனிஸதான அதன் அயல் நாடாகக் காணப்படுகின்றது. ஆனால், சோவியத் ஒன்றியம் - சோஷலிஸ வல்லரசாக இருந்தவேளையில், சின்சியாங்கில் காணப்பட்ட இஸ்லாமிய அடிப்படைவாதம் - சீனாவிற்கு மட்டுமல்ல சோவியத் ஒன்றியத்திற்கும் நெருக்கடிமிக்கதாகக் காணப் பட்டதனால், சின்சியாங் பிரதேசத்து முஸ்லிம் மக்கள் தமக்கான பிரிவினைக் கோரிக்கையினை உரத்துக் கோர முடியவில்லை. எனினும், சின்சியாங் பிரதேசத்து மக்களது பிரச்சினைக்கு, அவர்களது தனித்துவங்களை அங்கீகரித்து 1946 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் பிரகாரம்- சின்சியாங் பிரதேசத்திற்குரிய நிறைவேற்று அதிகாரிகளைத் தெரிவு செய்யும் உரிமை, மதத்தினை இழிவு படுத்தும் நடவடிக்கைகள் தண்டனைக்குரிய குற்றமாக கணிக்கப்படுதல், முதல் நிலை- இரண்டாம் நிலை பாடசாலைக் கல்விகளை சின்சியாங் மக்கள் தமது மொழியில் தமது தெரிவுரிமையின் அடிப்படையில் கற்றுக்கொள்ளும் உரிமை (ஆனால் சீன மொழியை இரண்டாம் மொழியாகக் கற்க வேண்டும்) மற்றும் கலை, கலாசார அபிவிருத்திக்காகவும், வளர்ச்சிக்காகவும் செயற்படும் உரிமை என நான்கு விடயங்களையும் சின்சியாங் மக்களது உரிமைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, அவர்களுக்குரிய சுயாட்சி வழங்கப் பட்டுள்ளது.



திபெத்திய மக்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்கள்போல், சின்சியாங் மக்களுக்கு - சீனக் குடியரசின் மீது ஏற்படவில்லை. இதனால் சின்சியாங் பிரதேசத்து மக்களது அமைதியான ஆட்சி முறையை அவதானித்து, 1955 ஆம் ஆண்டு- சின்சியாங்கை- தேசிய மாநிலமாகத் தரம் உயர்த்தி சீனக் குடியரசு தன்னுடன் இன்றும் எவ்வித பிரச்சினைகளும் இன்றி இணைத்து வைத் துள்ளது.

1955 ஆம் ஆண்டு சின்சியாங்கினைத் 'தேசிய சுயாட்சி' மாநிலமாகத் தரம் உயர்த்திய பின்னர், உள்ளூர் மக்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் அப்பிரதேசத்து சமூக நிறுவனங்களே - அப்பிரதேசத்து மக்களின் ஒத்துழைப்புக்களுடன் செயற்படத்தக்கவகையில் சட்டங்களை உருவாக்குதல், கொள்கைகளை வகுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்குச் சீனக்குடியரசு அதிகாரம் அளித்துள்ளது.

**வேலும்மயிலும் சேந்தன்**

எனினும், இன்றும் இஸ்லாமிய அடிப்படைவாதப் போக்குடையோர்- சின்சியாங் மாநில நிர்வாகத்திற்குப் பிரிந்து செல்வதற்கான நெருக்குவாரத்தினை அளித்துத்தான் வருகின்றனர். ஆனால், சீனாவின் பொருளாதார வளர்ச்சியும், அபிவிருத்தியும் இக்கோரிக்கையை வலுப்படுத்தாது, மட்டுப்படுத்தியுள்ளது எனலாம்.

இந்தவகையில் - திபெத்தும், சின்சியாங்கும் - சீனாவின் கம்யூனிஸத் தத்துவத்தினை ஏற்றுக் கொள்ள, இவ்விரு பிரதேச மதக் கொள்கைகள் என்றைக்கும் இடம் தரப்போவதில்லை. ஆனால், இன்று சீனா கருத்துநிலை ரீதியாகப் பெரிதளவில் மாறுபடாது விட்டாலும் - பொருளாதார சுதந்திரங்களை, போடடிச் சந்தைகளை உருவாக்கி வருகின்றமை - எதிர்காலத்தில் மதவாதம் இப்பிரதேசங்களில் வலுக்காமல் இருக்கக்கூடிய சாத்தியங்களை ஏற்படுத்தி இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

*(பிரதி செவ்வாய் தொடரும்)*

********************************************

# சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பணிகள் கடந்த வாரத்திலிருந்து விஸ்தரிப்பு!

(சரசாலை)

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பணிகள் யாவும் கடந்த வாரம் தொடக்கம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹெரல் அன்ரனியின் பணிப்பின் பேரில், பொலிஸாரால் இரவு, பகல் ரோந்து சேவை தினமும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் இடம்பெறும் சிறு சிறு குற்றச்செயல்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாகத் தமிழ்ப் பொலிஸாரைக் கொண்ட விசேட பிரிவும், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெனத் தனியான பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமது பகுதியில் குற்றச்செயல்கள் இடம்பெறின் - பொலிஸ் நிலையத்தில் நேரடியாக அல்லது 070-212806 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாமெனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீ.ஜீ. விமலசிறி தெரிவித்துள்ளார்.

(34)

# காரைநகர் சமுர்த்தி வங்கி நாளை திறந்து வைப்பு!

காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்க திறப்புவிழா நாளை காலை 9 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர், சமுர்த்திப் பணிமனை சமுர்த்தி முகாமையாளர் செல்வி எம்.வி.லியோனிற்றா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த சமுர்த்தி வங்கிச் சங்கம் காரைநகர், அல்வின் வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் திறந்து வைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(118)

# வல்வை பிரதேச மக்களுக்கு 12 ஆயிரம் மூக்குக் கண்ணாடிகள்

## இதுவரை இலவசமாக விநியோகம்

(சரசாலை)

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு இதுவரை 12 ஆயிரத்து 542 மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதென வல்வெட்டித்துறை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இம் மூக்குக்கண்ணாடிகள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

(34)

# மின்கட்டண நிலுவை செலுத்தாததால் 2500 மின் இணைப்புக்கள் வடமராட்சியில் துண்டிப்பு!

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதியில் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் மின்கட்டணத்தைச் செலுத்தாது, நிலுவையாக வைத்திருந்த இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட மின் பாவனையாளர்களுடைய மின் இணைப்புக்கள் இதுவரை துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரு வாரங்களாக மின் சாரசபை ஊழியர்கள் மின்கட்டணம் செலுத்தாது நிலுவையாக உள்ள இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டவர்களுடைய மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதுடன், அதற்குரிய முழுமையான பணத்தினைச் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சாரசபை ஊழியர்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை அடுத்து- மின் கட்டணங்கள் செலுத்தாத மின்பாவனையாளர்கள் தபாலகங்கள், வங்கிகளில் கட்டணத்தைச் செலுத்துவதற்கு முண்டியடித்து வருகின்றனர். அதேவேளை, இந்தவாரம் முதல், ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேல் நிலுவையாக இருக்கும் மின் பாவனையாளர்களுடைய மின் இணைப்புக்கள் துண்டிக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

(23)

# விவசாய உபகரணங்கள் இளவாலையில் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனமும், எக்கோ நிறுவனமும் இணைந்து இளவாலை வேளாண்மியர் சங்கத்தினூடாக - இளவாலை பெரியவிளான், சகாயபுரம், மாதகல் பகுதி விவசாயப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தொண்ணூறு மண்வெட்டிகள், பன்னிரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள், குழாய் இணைப்புக்கள் பன்னிரண்டு தெளிகருவிகள் என்பன விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

# மன்னாரில் நிக்கொட் 24 மில்லியன் செலவீடு

(சரசாலை)

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக நிக்கொட் நிறுவனத்தினால் இதுவரை 24 மில்லியன் ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கல்வி, சுகாதாரம் விவசாயம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரமுயர்த்தல் போன்றவற்றிற்கு இந்நிதி செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(34)

# 'கரைதேடும் ஓடங்கள்' என்ற நாடகம் என்மனதில் இனம்புரியா சோகம் தந்தது

## தமிழகத்தின் பிரபல பாடகி ரி.கே.கலா நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தெரிவிப்பு



திருகோணமலையில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க் கூடலில், கரைதேடும் ஓடங்கள் நாடகத்தைப் பார்த்தபின் எனக்குக் கட்டுப்படுத்த முடியாத, இனம்புரியாத சோக உணர்வு ஏற்பட்டது. நிகழ்வினிடையே எழுந்து வெளியே சென்று என் உணர்வுகளை நான் கட்டுப்படுத்த முனைந்தேன். ஏனெனில், அடுத்த எனது இசை நிகழ்வை என்னால் நடத்த முடியாமற்போய்விடுமோ என்று குழம்பினேன். அந்தளவுக்கு இலங்கையில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் அந்நாடகத்தில் பதிவாகியிருந்தது என, நேற்று யாழ். பத்திரிகையாளாருடனான சந்திப்பின்போது, தமிழகத்தின் பிரபல பாடகி ரி.கே.கலா தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நான் இலங்கைக்கு நான்கு தடவைகள் வந்துள்ளேன். ஆனால், முதன்முதலில் இம்முறையே நான் தமிழ் இசைக் கச்சேரிகளை இங்கு நடத்துகிறேன். இலங்கை பற்றி பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும வரும் தகவல்கள் மூலமே நான் அறிந்து வைத்திருந்தேன். இங்குவந்த பின்பே அனைத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடிந்தது.

எல்லோரும் எந்த இன்னலும் இன்றி வாழவேண்டும். அந்தநிலை இங்கு விரைவில் வரவேண்டும் என்றுதான் இறைவனை வேண்டினேன். நான் எத்தனையோ வெளிநாடுகளுக்கு- குறிப்பாக கனடா, சுவிஸ், தென்னாபிரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளேன். ஆனால், அங்கில்லாத மதிப்பையும், பாதுகாப்பையும் இங்கு கண்டேன். திருமலையில் மக்கள் என்னை, சாதாரண பாட்டுக்காரியாக நினைக்காமல், தங்களில் ஒருத்தியாகவே பார்த்தனர். என்னுடன் நன்றாகப் பழகினர். இந்த இசை நிகழ்ச்சியே நான் இதுவரை செய்த நிகழ்ச்சிகளில் ஆக்கபூர்வமானதாக இருந்தது.



இன்றைய தலைமுறையினருக்கு தமிழ் உச்சரிப்பு சரியாகவே வருவதில்லை. இதை நீங்கள் தென்னிந்திய சினிமாவில் தெளிவாகவே காணமுடியும். பழைய சினிமாக்களில் காணப்பட்ட சுத்தமான தமிழ் உச்சரிப்பு இன்றைய சினிமாவில் இல்லை.

எனது குடும்பம் கலைக்குடும்பம். எனது அம்மா இந்த நிமிஷமும் திரைப்படத்தில், தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துக்கொண்டே இருக்கிறார். எனது தாத்தா பிரபல தவில் வித்துவான்.

நான் ஆரம்பத்தில் ஓர் பின்னணிப் பாடகியாக மட்டும் இருந்தேன். பின்னர், சில மூத்த எழுத்தாளர்கள் என்னை தமிழ் இசைக் கச்சேரிகளில் பாடும்படி கேட்டார்கள். இது எனக்கு நியாயமான ஒன்றாகத் தோன்றியது. ஏனெனில், தமிழே தெரியாத தெலுங்கு, மலையாளி ஆகிய மொழிபேசும் பாடகர்கள் தமிழ் இசைக்கச்சேரி என்ற பெயரில் ஏதேதோ நடத்தும்போது- தமிழிச்சியான நான் ஏன் தமிழ் இசைக் கச்சேரிகளை நடத்தக்கூடாது என்ற உணர்வு என்னிடம் தோன்றியது. இதன்பின்னர்தான், நான் தமிழ் இசைக் கச்சேரிகளில் பாட ஆரம்பித்தேன்.

தமிழ் இசைக் கச்சேரிகளில் கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்களையும், தமிழீழ எழுச்சிப் பாடல்களையும் பாடுவேன். கச்சேரிக்கு வருவோர் அனைவரும் தமிழ் உணர்வுள்ளவர்கள். தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடும்போது, அங்குள்ளவர்கள் மிகவும் சந்தோஷமடைவார்கள்.

அண்மையில் திருகோணமலையில் கூட தமிழீழ எழுச்சிப்பாடல்களைப் பாடியுள்ளேன். தமிழர்களின் மரியாதையையும், கௌரவத்தையும் பேணிக்காக்க வேண்டும். தமிழர்களுக்கு என்று தன்மானம் இருக்கிறது. இப்படியான பாடல்களை ஒரு தமிழிச்சி என்ற முறையில் நான் பாடுவதில் எவ்வித ஆச்சரியமோ, வியப்போ இல்லை.

தமிழ்நாட்டிலும் கூட தமிழைப் பற்றிய பாடல்களை எந்த இடத்திலும் பாடலாம், பாடியுமுள்ளேன். அங்கு இதுவரை எந்தப் பிரச்சினையும் வரவில்லை.



ஏனெனில், தமிழ்நாட்டு அரசியலில் இருப்பவர்களும் தமிழ் உணர்வுள்ளவர்கள்தான்.

தமிழீழ எழுச்சிப் பாடல்கள் அருமையான பாடல்கள். நல்ல கருத்துக்களை அடக்கியிருக்கின்றன. இதனால்தான் நான் தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடுகின்றேன்.

எனது தமிழ் இசைக் கச்சேரிகளில், முதலில் காசி ஆனந்தனின் 'தழிழே உயிரே வணக்கம்' என்ற பாடலைத்தான் பாடுவதுண்டு.

நான் சினிமாவில் ஏ.ஆர்.ரஹ்மான் படங்கள் எல்லாவற்றிலும் பாடுவதுண்டு. உதாரணமாக- கருத்தம்மா, கிழக்குச் சீமையிலே, மேம்மாதம், தாஜ்மஹால் ஆகிய படங்களில் அவரின் இசையமைப்பில் பாடியுள்ளேன்.

நான் இங்குள்ள நிலைமைகளை நிச்சயமாக தமிழகத்திற்குச் சென்று எடுத்துரைப்பேன். என்னால் இயலக்கூடியவரையில், இங்குள்ள மக்களுக்கு எனது ஆதரவினைக் காட்டுவேன். தொடர்ந்து இங்குள்ள மக்களுடனான எனது உறவின்னைப் பேணுவேன் என்றார். (லி)

# சதாமும் அவரது சகாக்களும் சிரியாவில் தஞ்சமடைந்தனராம்

பக்தாத் நகர், கடந்த வெள்ளி அமெரிக்கப் படைகளிடம் வீழ்வதற்கு சிலமணிநேரத்துக்கு முன்பே, சதாமும் அவரது சகாக்களும் சிரியாவுக்குள் சென்றுவிட்டதாக, ஈராக்கின் முன்னாள் படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



சிரியத் தலைநகர் டமஸ்கஸ்ஸின் ஒரு தோற்றம்.

வடக்கு நகரான மோசூலில் உள்ள ஜெனரல் அலி அல்-ஜஜ்வாயி எனும் ஈராக் குடியரசு காவற்படைத் தளபதி தகவல் வெளியிடுகையில், சிரியா இவர்களுக்கு அடைக்கலம் அளித்துள்ளதாகவும் கூறினார். ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதி புஷ் - சிரியா, ஈராக்கியத் தலைவர்களுக்கு தஞ்சம் வழங்குவதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

எனினும், அமெரிக்காவின் இக்குற்றச்சாட்டை சிரியா மறுத்துள்ளது. ஈராக்கின் அவலங்களை உலகிற்கு மூடிமறைத்து கவனத்தை திசை திருப்புவதே அமெரிக்காவின் நோக்கம் என சிரியா தெரிவித்துள்ளது.

இதேவேளை - ஈராக்கின் முன்னாள் உள்துறையமைச்சரும், சதாமின் உறவினருமான வத்பான் இப்ராஹிம் அல் திக்ரிதி, சிரிய எல்லை அருகே வைத்து அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டு ஹெலிகொப்ரர் ஒன்றில் மேலதிக விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சிரிய எல்லையருகே உள்ள குவய்ம் எனும் நகரை கைப்பற்றிய அமெரிக்கப் படைகள், அங்கு பேரழிவு ஆயுதங்களை ஈராக்கியர் ஒழித்து வைத்துள்ளனரா எனத் தேடுதல் நடத்தினர். எனினும், தேடுதலில் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.



அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்பட்ட திக்ரிட் நகர வீதிகள் வெறிச்சோடிக்கிடக்கும் காட்சி.

# ஈராக் பொலிஸ் - அமெரிக்கப்படை கூட்டு ரோந்து பக்தாத்தில் ஆரம்பம்!



சுமார் இரண்டாயிரம் ஈராக்கியப் பொலிஸார், பக்தாத்தில் மீண்டும் ரோந்து வருகின்றனர். ஆனால், இம்முறை இவர்கள் அமெரிக்கப்படை அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்குகின்றனர். பக்தாத்தில் ஓரளவு அமைதி திரும்பினாலும் ஏனைய மாவட்டங்களில் கொள்ளைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பக்தாத் நகரில் சீர்குலைந்துள்ள சிவில் நிர்வாகச் செயற்பாட்டை சீர்ப்படுத்த, அமெரிக்கப் படைகளின் கூட்டுரோந்துக்கு வருமாறு, ஈராக்கிலுள்ள அமெரிக்க ஒலிபரப்பு நிலையமூடாக விடுக்கப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து, 2000 ஈராக்கியப் பொலிஸார் தேசிய பொலிஸ் கல்லூரியில் ஒன்று கூடினர். தற்போது கூட்டு ரோந்துக்கு அழைக்கப்பட்ட ஈராக்கியப் பொலிஸாரிடம், துப்பாக்கிகளை அமெரிக்கப் படைகள் வழங்குமா என்பது தெரியவரவில்லை.

இந்தப் பொலிஸாரின் கடந்த கால ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்ட பின்பே அவர்கள் சேவையில் சேர்க்கப்படுவர் என அமெரிக்க அதிகாரிகள் கூறியபோதும்,

இவர்களிடையே சதாமின் பாத் கட்சி உறுப்பினர்களும் ஊடுருவியிருக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது என்பதை அமெரிக்க அதிகாரிகள் ஏற்றுள்ளனர் என செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகவலம்



அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்படும் கொள்ளையர்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
☆ ஆகக்குறைந்த தகைமை (G.C.E. O/L)
☆ பாடநெறிக் கட்டணத்தை இலகுவாக தவணைமுறையில் செலுத்தலாம்.
☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

இன்றும் (15.04.03) நாளையும் (16.04.03) பின்வரும் யாழ். முகவரியில் நீங்கள் சந்திக்கலாம்

**S.M.THALHA (Consultant)**
30 1/1, சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059
072-859041
(சி-765)

# அன்னை பூபதி நினைவாக மட்டு. விளையாட்டு விழா

தியாக தீபம் அன்னை பூபதியின் பதினைந்தாம் ஆண்டு நிறைவாக மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி, மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ மதுமல்குகா வீரபத்திர சுவாமி ஆலய முன்றலில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, விவேகானந்தா சனசமூக நிலையத் தலைவர் தேவராஜன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில்-.

பிரதம விருந்தினராக - தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், சிறப்பு அதிதிகளாக - குடும்பிமலை கோட்டத் தளபதி தாத்தா, குடும்பிமலைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஜெயா, மட்டு - அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ரெஜினோல்ட், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் நிசாம், கௌரவ விருந்தினர்களாக - அன்பரசன், மட்டு.மாவட்ட நிதிப் பொறுப்பாளர் சோழன், ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# பிரிட்டனின் சார்ஸ் நோயாளி கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்பு)

'சார்ஸ்' நோயின் அறிகுறியுடன் காணப்பட்ட, பிரித்தானியாவைச் சேர்ந்த ஒருவர் கண்டியிலுள்ள பெரதெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு, சார்ஸ் நோயின் நிமோனியா வைரஸ் இருப்பது உறுதி செய்யப்படுமெனில், கொழும்பிலுள்ள ஐ.டி.எச். வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இரவுவேளை விளக்கு வெளிச்சத்தில் பெற்றோல் ஊற்றியவர் படுகாயம்!

(கிளிநொச்சி)

பெற்றோல் தீப்பிடித்ததால் கிளிநொச்சியில் - யூனியன் குளத்தைச் சேர்ந்த ஒருவர் எரியுண்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு, சின்னப்பொடி கந்தசாமி (வயது 53) என்பவர் - விளக்கு வெளிச்சத்தில் வைத்து - ஒரு கொள்கலனிலிருந்து இன்னுமோர் கொள்கலனுக்குள் பெற்றோலை ஊற்றும்போது, பெற்றோல் தீப்பற்றி உடம்பு பூராகவும் தீக் காயத்துக்கு உள்ளானார்.

பின்னர் இவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக நேற்று அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். (லி)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
LECTURES BY:
**MR.M.A.HARI**
புதிய பிரிவு ஆரம்பம்
16.04.2003 புதன் மாலை 6 மணி
wed / mon } 6 p.m - 7 p.m
**HARY'S INSTITUTE**
இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (சி-824)

# 64 யுவதிகள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் சுமார் ஒருவருட காலமாகத் தஞ்சம் புகுந்திருந்த 64 இலங்கை யுவதிகள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ள 500 பேரில் 64 பேரே நேற்று நாடு திரும்பினர்.

மேலும் 48 யுவதிகள் எதிர்வரும் புதன்கிழமை நாடு திரும்பவுள்ளனர். ஏனையவர்களை அடுத்த 10 தினங்களுக்குள் திருப்பி அழைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வரதன் குழுவின்...

பேர் காயமடைந்தனர்.

இதனால் ஆத்திரமுற்ற - கணேசனின் உறவினர் ஒருவர் வரதன் குழுவினரைத் தாக்கினார். இதில் வரதர் அணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பேர் காயமடைந்தனர்.

சம்பவம் நடைபெற்ற வீட்டு இளைஞர் ஒருவர் விடுதலைப் புலி உறுப்பினராக இருக்கின்றார் எனத் தகவல்கள் கிடைத்துள்ள போதிலும், அதனைத் தங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்று வரதன் குழுவினர் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற வீட்டில் தமது உறுப்பினர்களோ, ஆதரவாளர்களோ இல்லை என்றும், குறிப்பிட்ட சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இலங்கை கோரிய....

இராமேஸ்வரம் - மன்னார் பாதை அமைப்பது குறித்துக் கலந்துரையாடினார். இலங்கையில் புகையிரத சேவையை மேம்படுத்துவதற்கு இந்தியா உதவிபுரியவுள்ள தென நாராயணசாமி, அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் இக்கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

இதேவேளை -

இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாதை அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும், உலகவங்கியும் நிதியுதவியளிக்கவுள்ளதாகவும் - அங்கு தெரிவிக்கப்பட்டது. (01)

## பதினொரு பேர் பலி

சித்திரைப் புத்தாண்டு தினத்தில் கொழும்பில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி பதினொரு பேர் பலியாகியுள்ளனர்.

MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
**இலவசக்கணனிப்பயிற்சி**
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 20.04.2003 இற்கு முன்னர் நேரில்
MCS (சி.846)

யாழ். நகரில் புதியதோர் உதயம் 14-04-03 முதல்

**INTERNET BROWSING CENTRE**
SECOTE INFORMATION TECHNOLOGIES (PVT) LIMITED
குறைந்த கட்டணத்தில்
INTERNET BROWSING, E-MAIL, NET PHONE, SCANNING, PHOTO COPYING, CD WRITING.
325/1, பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (311)


நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனமும் STP கணனி நிறுவனமும் இணைந்து நடாத்தும்
**மாபெரும் இலவச கணனிக் கருத்தரங்கு**
இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்: 16.04.03, புதன் கிழமை
நேரம்: காலை 10.00 மணி தொடக்கம் 01.00 மணி வரை
கணனி ஓர் அறிமுகம், மென்பொருட்கள், வன்பொருட்கள், அரசின் கணனிக் கல்வித் திட்டம், இணையம், நவீன வரவுகள்
STP
பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நமது ஈழநாடு

**கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும்**
தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகியும் தமிழ் இசைப் பாடகியுமான
**ரீ.கே.கலா**
இடம்: யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம்: 16.04.2003 (புதன்) பி.பகல் 4.00மணி.
தமிழீழ இசைக் கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்
மாபெரும் தமிழ் இசை மாலை

நமது ஈழநாடு
ராம்கோ சீமெந்து

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.